www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

1 - 15 அக். '88

3 - 22

விலை ரூ. 1-50


மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




அன்புள்ள ஆசிரியருக்கு,

● பாராட்டுவதற்காகச் சொல்லவில்லை. உண்மையில் 'புதிய ஜனநாயகம்' ஏட்டிற்கு ஈடு இணையான ஏடு நம் நாட்டில் இல்லை. ஏனென்றால், நாட்டு நடப்புகளைத் தெளிவாக எடுத்துரைக்கிறீர்கள். சமுதாயச் சீர்கேடுகளைச் சாடுகிறீர்கள். ஆளும் கட்சியினரும் அவர்களின் அடியேந்திகளாக உள்ள அதிகார வர்க்கத்தினரும் செய்யும் ஊழல்களைத் தோலுரித்துக் காட்டுகிறீர்கள். இவற்றோடு கூட தன்மான உணர்வு மற்றும் சமுதாய முற்போக்குக் கருத்துக்களுக்கெல்லாம் தங்கள் ஏட்டில் சிறப்பிடம் தருவதோடு, ஓட்டுக் கட்சிகளின் மடத்தனமான பிதற்றல்களை தெளிவார்ந்த அறிவுக் கூர்மையுடன் சாடுகின்ற பாங்கு கண்டு நான் உண்மையிலேயே பூரித்துப்போகிறேன். புரட்சிமிகு கருத்துக்களை தாங்கிவரும் 'புதிய ஜனநாயகம்' பாரெங்கும் படரட்டும்! என்றென்றும் அறிவுமழை பொழியட்டும்!

கவிஞர் இடிமுரசு — சென்னை

● ஆகஸ்ட் 16—31 இதழ் மொத்தத்தில் மிகச் சிறப்பாக இருந்தது. பீரங்கித் திருடன் ராஜீவின் புதிய ஊழல்கள் என்ற கட்டுரையும், விளம்பர சுவரொட்டியும் மக்கள் மத்தியில் மிகச் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது. வெள்ளையனே வெளியேறு என்று நாடகமாடிய காந்தி—காங்கிரசின் வேசித்தனத்தை வண்டார்குழலி மணாளன் மிகச் சரியாகவும் எடுப்பாகவும் தோலுரித்துக் காட்டியுள்ளார்.

வாசகர் வட்டம் — இராசிபுரம்

● செப். 1—15 இதழின் இமாலயப் பேரழிவு என்ற தலையங்கக் கட்டுரை, மக்கள் நலனில் அக்கறையற்ற ஆட்சியாளர்கள் மீது கோபம் கொப்பளிக்குமாறு உணர்வூட்டியது. போலீசு நிலையத்தில் சாராயக்கடை ஏலம் என்ற செய்தி போலீசு கும்பலின் முகமூடியை கிழித்தெறிந்துள்ளது. எங்கள் பகுதியிலும் கடைக்கு 400, 500 என்ற மாமூல் வாங்கிக் கொண்டு, கள்ளச் சாராயத்தை போலீசார் வெள்ளமாக ஓடவிடுகின்றனர். இந்தியாவின் கிழக்கே பர்மாவில் வீசும் புரட்சிப் பேரலை என்ற கட்டுரை விரைவில் அது இந்தியாவிலும் வீசும் என்பதற்கு கட்டியங் கூறுவதாக இருந்தது.

பகத்சிங் மன்றம் — பேரோடு

● ஆகஸ்ட் 16—31 இதழில் வெளியான வெள்ளையனே வெளியேறு நாடகமும் காங்கிரசின் வேசித்தனமும் என்ற கட்டுரை மிகச் சிறப்பானது. தேசத்துரோகிகளான காங்கிரசு கும்பல் ஏகாதிபத்திய நாய்களுக்கு தரகுவேலை பார்த்ததை ஆதாரத்துடன் தொகுத்து வெளியிட்டமைக்கு எமது புரட்சிகர வாழ்த்துக்கள்! மகாத்மாக்களாகவும், ஆசிய ஜோதிகளாகவும், இரும்பு மனிதர்களாகவும், மூதறிஞர்களாகவும் சித்தரிக்கப்படுகின்ற காங்கிரசு பெரிய மனிதர்களின் செயல்களைப் பார்க்கப் பார்க்க, கேட்க கேட்க, படிக்க படிக்க அந்த துரோகிகள் இப்போது இல்லாவிட்டாலும் அவர்களின் படத்திலாவது காறித் துப்ப வேண்டும் என்ற ஆத்திரம்தான் வருகிறது.

கணேஷ் — கம்பம்

> **அன்பார்ந்த வாசகத் தோழர்களே**
>
> இதழ் எண் 20ல், 'போலிச் சுதந்திரத்தைத் திரை கிழித்து' என்ற தலைப்பில் வெளியான அமைப்புச் செய்தி பகுதியில், கோம்பை நகரில் வி.வி.மு. பிரச்சாரக் குழுவினர் நடத்தியபொதுக் கூட்டத்தில் 500 பேர் கலந்து கொண்டனர் என்பதற்குப் பதிலாக, அச்சுப் பிழை காரணமாக 5000 பேர் கலந்து கொண்டனர் என்று தவறாக வெளியாகியுள்ளது. எமது கவனக் குறைவால் நேர்ந்த இத்தவறுக்கு மிகவும் வருந்துகிறோம்.
>
> —ஆசிரியர் குழு

● எங்களைப போன்ற 2-வது 3-வது வகுப்பு வரை படித்த விவசாயிகளுக்குக்கூட புரியும் வகையில் 'புதிய ஜனநாயகம்' மிகவும் எளிமையாகவும் சிறப்பாகவும் உள்ளது. நமது பத்திரிக்கையை விரைவில் வார இதழாகக் கொண்டுவர கோருகிறோம். ஜூலை இதழில் ஓடுகாலிகளும் அவர்களுடைய பங்காளிகளும் நடத்திய கூட்டு அரசியல் பித்தலாட்டத்தை தோலுரித்துக் காட்டியது சிறப்பாக இருந்தது.

மார்க்ஸ், அகன் — மதுரை

● நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது என்றும், தனி மனித உரிமைகளும் ரகசியங்களும் பாதுகாக்கப்படுகிறது என்றும் ஆட்சியாளர்கள் உருவாக்கிய பிரமையை டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம் சுக்கு நூறாக உடைத்தெறிந்துவிட்டது. இதைத் தெளிவாகவும் ஆழமாகவும் விளக்கிய புதிய ஜனநாயகத்துக்குப் புரட்சிகர வாழ்த்துக்கள்!

பீரங்கித் திருடன் ராஜீவின் புதிய ஊழல்கள் என்ற கட்டுரை, பாசிச ராஜீவ் இன்னுமொரு மார்க்கோஸ் என்பதை தெளிவாக நிருபித்துக் காட்டியது. கம்யூனிச எதிர்ப்பு தினமணி நாளேடுகூட மே. வங்க போலிகளின் ஆட்சியைப் பாராட்டும்போது, 'மார்க்சிஸ்டு' போலிகளின் ஊழல்மலிந்த மக்கள் விரோத ஆட்சியை எடுப்பாக அம்பலப்படுத்திக் காட்டியது, 'நஞ்சாகிப் போனது உணவு' என்ற கட்டுரை.

வாசகர் வட்டம் — மதுரை

● இன்னுமொரு எம். ஜி. ஆராக முயற்சிக்கும் பாசிச ராஜீவ் தமிழக சுற்றுப் பயணத்தில் நடத்திய கூத்துக்களை ஆகஸ்ட் 16—31 இதழ் எடுப்பாக அம்பலப்படுத்திக் காட்டியது. குறிப்பான நேரத்தில் தேசத் துரோகிகளின் முகமூடிகளைக் கிழித்தெறியும் வகையில், வெள்ளையனே வெளியேறு நாடகம் என்ற கட்டுரை அமைந்தது. இதர கட்டுரைகளும் சிறப்பாக அமைந்தன. அட்டைப்படம் எளிமையாகவும் எடுப்பாகவும் புரியும்படியும் அமைய கவனம் செலுத்துங்கள்.

வாசகர் வட்டம் — கல்லை வட்டம்

● ஆகஸ்ட் 16—31 இதழில் வெளியான காங்கிரசின் வேசித்தனத்தைப் பற்றிய சிறப்புக் கட்டுரை நேரத்திற்கு ஏற்றதாக அருமையாக இருந்தது. இதுதான் இன்றைய இந்தியா படமும் செய்தியும் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. இதழில் தமிழக செய்திகளை இன்னும் அதிகரிக்கக் கோருகிறோம்.

வாசகர் வட்டம் — நெய்வேலி—வடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

22

1—15 அக்டோபர் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1.50
ஆண்டு சந்தா : ரூ. 36

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
ஆண்டு சந்தா : ரூ 170

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

### அவதூறு மசோதா வாபஸ்

# பதுங்குகிறது பாசிசகும்பல், பாய்வதற்கு!

"அவதூறு மசோதா (1988)வை சட்டமாக்குவதில்லை" என்று பாசிச ராஜீவ் கும்பல் அறிவித்துள்ளது. கௌரவத்தை விட்டுக் கொடுக்காத வகையில் வார்த்தைகளை அமைத்துக் கூறுகிறது; வேறுவழியின்றி பொது மக்கள் கருத்து—நிர்பந்தத்துக்குப் பணிந்து அவதூறுச்சட்டத்தைவிலக்கிக் கொண்டு விட்டது. இது மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்று எண்ணுவது பாமரத்தனமானது. உடனடியாகவும் நேரடியாகவும், குரூரமாகவும்—அப்பட்டமாகவும் பத்திரிக்கைகள்மீது பாய்ந்து, உரிமைகளைப் பறிப்பது தற்காலிகமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு பாசிச ராஜீவ் கும்பலுக்குத் தோல்விதான்; பத்திரிக்கைச் சுதந்திரத்துக்குக் கிடைத்துள்ள வெற்றிதான்!

ஆனால் பாசிச ராஜீவ் கும்பல் பதுங்கியிருக்கிறது; மீண்டும் பாய்வதற்கு. வேறு வழியில் பத்திரிக்கை சுதந்திரம் உட்படமக்களின் அனைத்து உரிமைகளையும் பறிப்பதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது. "அவதூறு மசோதாவைச் சட்டமாக்குவதில்லை" என்கிற பிரதமரின் அறிக்கையிலேயே அது நேரடியாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அவதூறு மசோதாவை சட்டமாக்குவதில்லை என்கிற முடிவெடுப்பதற்கு முன்பு கடைசி நிமிடம் வரை அதைக் காப்பாற்றிவிடச் செய்த பாசிச ராஜீவ் கும்பலின் எல்லா எத்தணிப்புகளும் இதையே காட்டுகின்றன. அவதூறு சட்டத்தைக் கொண்டு வருவதற்கான பின்னணி—அவசியம், அதைப் பரம ரகசியமாக பாசிச ராஜீவ் கும்பல் தயாரித்த விதம் ஆகியனவும் அதையே காட்டுகின்றன.

அவதூறான பேச்சு, எழுத்து, நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் தனிநபருக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்தோடு அவதூறுச் சட்டம் கொண்டுவரப் பட்டதாம். உடனடியாகவும், நேரத்திலும் நிவாரணமளிக்க கொண்டு வரப்பட்டதாம். தற்போதுள்ள சட்டத்தை நெறிப்படுத்துவதுதானாம். அரசுக்கும் பத்திரிக்கைக்கும் இடையிலான விவகாரமல்ல; தனிநபர்களுக்கிடையான அவதூறு செய்யும் விவகாரமாம். கருத்துச் சுதந்திரத்துக்கும் தனிநபர் உரிமைகளுக்கும் இடையிலான சமரசப்படுத்தும் முயற்சிதான் அவதூறு மசோதாவாம்!—இப்படிச்சொல்லுகிறது பாசிச ராஜீவ்கும்பல்.

பீகார், ஒரிசா, தமிழ்நாடு அரசுகளில் இருந்த தமதுஎடுபிடிகளை விட்டு பத்திரிக்கைச் சுதந்திரத்தை ஒடுக்கும் சட்டம் கொண்டு வந்த பாசிச ராஜீவ் கும்பல் அதை மதிப்பதாகப் புளுகுகிறது. பத்திரிக்கையாளர்கள்மீது போலீசு ரௌடிக் கும்பலையும் உளவுப் படையையும் ஏவி கொலை வெறியாட்டம் போட்டது. தனது பிரதான எதிரியான "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கம்பெனியை நசுக்குவதற்கு எவ்வளவோ வகையில் முயன்றது. அம்பலப்படுத்தும் வேலைகளை "இந்து" "ஸ்டேட்ஸ்மேன்" போன்ற வைதீக ஏடுகளும் மேற்கொண்டதும் ஆத்திரமுற்று அடக்கவே அவதூறு மசோதாவைக் கொண்டு வந்தது. இதுவரை சிவில் வழக்கு விவகாரமாய் இருந்த அவதூறுச் சட்டத்தை கிரிமினல் வழக்கு விவகாரமாக்கித் தண்டிக்கும் சட்டம்கொண்டு வந்தது. இப்போது சாத்தான் வேதம் ஓதுவதுபோல பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பற்றி வாய்கிழியப் பேசுகிறது.

காந்தி, நேரு, இந்திரா வழியில் ஜனநாயகக் கருத்துக்கு மதிப்பளித்து நிபந்தனையற்ற விவாதத்துக்கு முன்வந்ததாம். சிலரே முன் வந்தார்கள், இன்னும் பரவலான, விரிவான விவாதம் நடப்பதற்கு வசதியாக மசோதாவை சட்டமாக்கவில்லையாம். இன்னமும் அவதூறுப் பிரச்சினை நிலவுகிறதாம். முழு விவாதத்துக்குப்பிறகு தேசியப் பொதுக் கருத்தை ஏற்படுத்திவிட்டு பிரச்சினை தீர்க்கப்படுமாம்— இப்படிச் சொல்லுகிறது பாசிச ராஜீவ் கும்பல்.

காந்தி, நேரு, இந்திரா—சிறுபான்மையாக, தனிநபராக இருந்தும் எப்படி சர்வாதிகாரமான வழிகளில் தமது கருத்துக்களைத் திணித்தார்கள் என்பது பழைய வரலாறு. கடந்த ஓராண்டாக பரமரகசியமாக ஒரு கருப்பு மசோதாவைத் தயாரித்து ஒரே நாளில் புறக்கடை வழியே விவாதமே இன்றி திடீரென்று சட்டமாக்க பாசிச ராஜீவ் கும்பல் முயன்றது நேற்றைய அனுபவம். "தேசிய விவாதம்" நடத்திய போதும் முஸ்லீம் பெண்கள் சட்டம், கட்சி மாறுவது தடுப்புச் சட்டம் போன்ற பிற்போக்கு சட்டங்களைக் கொண்டு வந்தது போலவே பின்னர் பத்திரிக்கைகள் மீதும் பாசிச ராஜீவ் கும்பல் பாயும் என்பது உறுதி.

பயங்கரவாதத் தடைச் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசியப் பணித்துறைச் சட்டம், கலவரப் பகுதி, சிறப்பு நீதிமன்றச் சட்டங்கள், பிரதமருக்குத் தனிக் காவல்படைச் சட்டம் போன்றபல கறுப்புச் சட்டங்களை அடுத்தடுத்து கொண்டு வந்தபாசிச ராஜீவ் கும்பல் 59வது சட்டத் திருத்தம் என்கிற அவசர நிலைப் பிரகடனச் சட்டத்தையும் போட்டுள்ளது. இவை அனைத்துக்கும் எதிராக, பாசிச அபாயத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஐக்கியப்பட்டு, உறுதியாகப் போராடுவதன் மூலமே கொஞ்ச நஞ்ச உரிமைகளையும் காத்திட முடியும். ●

படிப்பகம்

www.padippakam.com

# போலீசைத் திருத்த முடியுமா?

பங்களா நாயின் அட்டகாசம் உச்சத்துக்குப் போய்விட்டது. தெருவில் போவோர் வருவோரை எல்லாம் பாய்ந்து கடித்து குதறுகிறது. பார்த்து ரசிக்கிறான் எஜமானன். எக்கச்சக்கமாகத் தீனிபோட்டு இன்னும் செல்லமாக வளர்க்கிறான். எஜமானனின் எடுபிடிகளுக்கே ஒவ்வொரு நாளும் பயம். எங்கே தங்கள் மீதே பாய்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சியே அங்கு போய் சேவகம் செய்கிறார்கள். சில நாட்களில்அதுஅவர்கள் மீதும் தாவ, அவர்கள் துணிகளைக் கிழித்துக் கொண்டு தப்பியதும் உண்டு.

எனவே பங்களா நாய்க்கு சைவச் சாப்பாடு போடும்படியும் கொஞ்சம் கட்டுப்படுத்தி வைக்கும்படியும் எஜமானனிடம் அவனது எடுபிடிகள் கெஞ்சுகிறார்கள். எஜமானனோ கேட்பதாக இல்லை. நாயின் அட்டகாசம் அவனுடைய அதிகாரத்தை—செல்வாக்கைக் காட்டுவதற்கானது என்ற அகங்காரத்தில் மிதக்கிறான். நாய்க்கோ வெறி பிடித்து பங்களா வாசிகளையே ருசி பார்க்கும் அளவு கொழுப்பு ஏறிக்கொண்டே போகிறது.

ஆம்! தரகு அதிகார முதலாளிகள், நிலப் பிரபுக்களின் செல்ல நாயாகத் தின்று கொழுத்துத் திரிகிறது போலீசுப் படை. பொதுமக்கள் மீது அது பாய்ந்து கடித்துக் குதறுவதைத் அவர்கள் ரசிக்கிறார்கள். ஆனால் அவர்களது எடுபிடிகளான போலிக் கம்யூனிஸ்டுகள், போலி முற்போக்குகள், போலி ஜனநாயகவாதிகளுக்கோ உதைப்பு! பங்களா நாயை சைவ நாயாக வளர்க்கும்படியாக ஆளும் வர்க்கங்களிடம் கெஞ்சுகிறார்கள்.

"மாமா" நேரு பரம்பரைக்கே அரசியல் மாமா டாங்கே. ஆளும் வர்க்கத்தின் மிகவும் நம்பகமான எடுபிடி. பாட்டாளிகளின் மிக மோசமான துரோகி. அந்த டாங்கேயின் நேரடி—இளைய பங்காளி கருப்பூர் பண்ணையார் "கம்யூனிஸ்டு" கல்யாணசுந்தரம். அவரது வளர்ப்புப் பிள்ளை—வாரிசு தா. பாண்டியன் கும்பல். ஆளும் வர்க்கங்களுக்கு அரசியல் மாமா வேலை செய்வதற்காக ராஜேஸ்வர ராவ்—மாணிக்கம் கும்பலுக்குப் போட்டியாக தனித் தொழில்-தனி வியாபாரம் தொடங்கியுள்ளதல்லவா! அது ராஜீவ்—மூப்பனாரின் எச்சிலைப் பொறுக்குவதற்காக—வரும் தேர்தலில் ஓரிரு சீட்டுக்களையாவது பெறுவதற்காக தமிழகம் முழுவதும் ஓர் இயக்கம் நடத்து கிறது! "தமிழக காவல் துறையை சீர்படுத்துக" என்பதுதான் தா. பாண்டியன் கும்பல் நடத்தும் இயக்கம்!

"சட்டத்தின் காவலர்களாகவும், மக்களின் நண்பர்களாகவும் விளங்க வேண்டிய தமிழக காவல் துறையினரிடையே தற்போது விரும்பத் தகாத சக்திகள் புகுந்துள்ளன" என்று கூறும் தா. பாண்டியன் தலைமையிலான கட்சி, திருவான்மியூர் 'ஆட்டோ' சங்கர் விவகாரத்தையும், தர்மபுரி தளி ஆசிரியை கற்பழிப்பு நிகழ்ச்சியையும் இன்னும் சில போலீசு நடத்தைகளையும் சுட்டிக் காட்டுகிறது. போலீசின் லஞ்ச ஊழல், அப்பாவிகள் மீது பொய் வழக்குகள் போடுவது போன்றவற்றை சொல்லி 'காவல் துறையினரின் தேவையற்ற கெடுபிடிகள் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது' 'இத்தகைய போக்குகள் களையப்படவும், காவல் துறையில் ஊடுருவியுள்ள விரும்பத்தகாத சக்திகளை வெளியேற்றவும் கோரி' பாண்டியன் கட்சி இயக்கம் நடத்துகிறது! அதன் ஒரு பகுதியாக சென்றமாதம் சென்னை கோட்டையை நோக்கி ஒரு ஊர்வலம் நடத்தியது.

போலிக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரவாளராயிருந்தவர், பிறகு துக்ளக் சோவின் அபிமானியானவர் 'மக்கள் உரிமைக் கழக'த் தலைவர் பாளை. சண்முகம். போலீசுத் துறையை சீரமைக்கும்படி ஒரு கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றி பிரதமருக்கும் அரசுத் தலைவருக்கும், ஆளுநருக்கும், உயர் போலீசு அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளார். திருவான்மியூர் 'ஆட்டோ' சங்கர் விவகாரத்தை ஆதாரமாகக் கூறி 'தற்போதுள்ள போலீஸ் அமைப்பைக் களைந்து விட்டு முன்னாள் ஐ. ஜியான எஃப். வி. அருள் போன்றவர் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து போலீசுத் துறையை மறு ஒழுங்கமைப்பு—சீரமைப்பு செய்ய வேண்டும்" என்று அந்த தீர்மானத்தில் எழுதியுள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் போலீ

போலீசாரின் குரூரம் சைக்கிள்கம்பியினால்கண்களைக் தோண்டி திராவகம் ஊற்றபட்ட பாகல்பூர் குற்றவாளிகள்.





படிப்பகம்

www.padippakam.com

சுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு தீர்மானம் விவாதிக்கப்படும் ஒவ்வொரு முறையும் போலிக் கம்யூனிஸ்டுகள் இதையே கோரி வந்திருக்கிறார்கள். மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் போலீசார் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அதற்காக போலீசு துறையை சீரமைக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். ஒவ்வொரு முறை போலீசு அக்கிரமம் நடக்கும்போதும் விசாரணைக் கமிஷன்போட்டு தவறு செய்த போலீசாரைத் தண்டிக்கும்படி கோருகிறார்கள். எதற்காக? அதிலுள்ள குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் போலீசுத் துறையின் மீது மக்கள் நம்பிக்கை கொள்ள வைப்பதற்காக! போலீசு மக்களின் நண்பர்களாக நடந்து கொள்ள வேண்டும்; அதற்காக பயிற்சி அளிக்க வேண்டும் என்று பலமுறை மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆக, "போலீசுத் துறை அவசியமானது; அடிப்படையில் சரியானது; ஏதோ சில விரும்பத்தகாத நபர்கள் ஊடுருவிவிட்டார்கள்; விரும்பத்தகாத போக்குகள் தலை தூக்கிவிட்டன. அதுவளர்ந்துவிட்டது. தற்போதுஒட்டுமொத்தமாக சீரமைக்க வேண்டியுள்ளது. தவறான போக்குகளைக் களைந்தும், ஊடுருவியுள்ள சக்திகளை வெளியேற்றியும் அதை ஒழுங்குபடுத்திவிட முடியும். போலீசுத்துறை மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நடந்து கொள்ளவேண்டும். இல்லை என்றால் அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்து விடுவார்கள்" என்கிற அடிப்படையிலும், எச்சரிக்கும் வகையிலும் தான் இந்தப் போலிகளின் கோரிக்கைகள் அமைந்துள்ளன.

தமிழகத்தில் மட்டும்தான் திருத்த வேண்டிய, சீரமைக்க வேண்டிய, மக்களின் நம்பிக்கையைப் பெறுவதாக மாற்றுஅமைக்கும் அளவுக்கு போலீசு சீரழிந்து போயுள்ளதா? மற்ற மாநிலங்களிலும் இதே நிலைமை தானா?

1970களில் ஐதராபாத்தில் போலீசார் ரமீஜா பீபி என்ற பெண்ணைக் கற்பழித்து, அவளது கணவனைக் கொன்ற வழக்கை விசாரித்த நீதிபதி முல்லா சொன்னார், "நாட்டிலேயே சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட, அமைப்பு ரீதியில் ஒன்று திரட்டப்பட்ட மிகப் பெரிய சமூக விரோத ரௌடிக் கும்பல் போலீசுதான்". ஒட்டுப் பொறுக்கிகள் மற்றும் சமூக விரோத கிரிமினல் குண்டர்களின் தேர்தல் அராஜகத்துக்குத் துணை போகும் போலீசு பற்றி எழுதும்போது, "வருடத்தின் 364 நாட்கள் ஒருதலைப் பட்சமாக செயல்படும் ஒரு போலீசுப் படை தேர்தல் நாளன்று மட்டும் திடீரென்று மாறிவிடும் என்று எதிர்பார்ப்பது வீண் பிரமை" என்கிறார் சக்சேனா. இவர் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பொது இயக்குனராகவும், தேசிய போலீசு கமிஷனின் உறுப்பினராகவும், மத்திய அரசு ஊழியர் தேர்வு கமிசனின் உறுப்பினராகவும் இருந்தவர்.

எனவே இங்கே அடிப்படையாகவே ஒரு கேள்வி எழுகிறது. போலீசைத் திருத்த முடியுமா? சட்ட ஒழுங்கு, நேர்மையுடையதாக மக்களின் நம்பிக்கையைப் பெற்றதாக சீரமைக்க முடியுமா? முடியாது. முடியவே முடியாது!

ஏனெனில் போலீசு,

—அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட சட்ட விரோத, சமூக விரோத, வன்முறைக் கும்பல்.

—அதனிடம் நேர்மையும், நியாயமும், ஒழுங்கும் மருந்துக்குக்கூட கிடையாது.

—மக்களின் வரிப்பணத்தைத் தின்று கொழுத்து மக்களையே ஒடுக்கும் மிருகம், தனிவகை ஜாதி.

—லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளில் ஊறித் திளைக்கும் கூட்டம்.

—காமக் களிவெறியாட்டக் கும்பல், அற்பத் தனமும் அதிகார வெறியும், குரூர வக்ர புத்தியும் கொண்ட கும்பல்.

—சமூக விரோதிகளின் பங்காளி. அது மட்டுமல்ல, இதுவே ஒரு சமூக விரோத கும்டல்.

—மக்களின் உதிரம் குடிக்கும், சித்திரவதை செய்து தனி நபர்களையும், வெகுஜனப்படுகொலைகளையும் செய்யும் வெறிபிடித்த கும்பல்.

இத்தனை குற்றச்சாட்டுகளையும் நிரூபிப்பதற்கான ஏராளமான சாட்சியங்களை— சான்றுகளைக் கொண்டு வந்து குவிக்க முடியும். இவை ஏதோ போலீசுத் துறையின் சில நபர்களது குற்றங்கள் அல்ல. அடிமுதல் முடிவரை சகல மட்டங்களிலும் மலிந்து கிடப்பவை என்றும் நிரூபிக்க முடியும்.

## கொலைவெறிக் கும்பல்

மக்கள் திரள் படுகொலை, "போலீசுடன் மோதல்" என்கிற நாடகமாடிக் கொலை, சிறைக்கொட்டடி சித்திரவதைப் படுகொலை என்று கொலை வெறிபிடித்தலைகிறது போலீசுக் கும்பல். முதலாளிகள், நிலப்பிரபுக்களின் சாராய விருந்து தின்ற மதமதப்பில் போலீசுக் குண்டர்கள் தொழிலாளர்கள்—விவசாயிகளைச் சுட்டுக் கொன்ற சம்பவங்கள் ஏராளம். ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கு ஈடாக தொழிலாளர்கள்—விவசாயிகளை நான்கு சுவர் மைதானத்துக்குள் சுற்றி வளைத்து நூற்றுக்கணக்கில் சுட்டுக் கொன்றார்கள்—ஜனதா ஆட்சியில் (1978) கான்பூர் சுதேசி ஆலைப் போராட்டத்தில்; இந்திரா ஆட்சியில் (1982) பம்பாய் பஞ்சாலைப் போராட்டத்தில் ராஜீவ் ஆட்சியில் (1986) பீகார்—ஆர்வால் சிறுநகரில். விவசாயிகள் போராட்டத்தில். இன்னும்

போலீசு காமவேட்டைக்கு பலியானவர்கள்—தங்கமணி கிராம பெண்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ஏராளமான சான்றுகள் கூற முடியும்.

உரிமைக்காகப் போராடிய மாணவர்கள்; தங்கள் கிராமத்து வழியே பஸ் விடக் கோரிய கிராம மக்கள்; ஆழ்குழாய்க் கிணறு வெட்டுவதை எதிர்த்த பெண்கள்; பாசனத்துக்கு கால்வாய் நீரைத் திறந்துவிடக் கோரிய விவசாயிகள்; சங்க அங்கீகாரம் கோரிய தொழிலாளர்கள்—போலீசுக் கும்பலால் படுகொலைசெய்யப்பட்டார்கள். போராடியவர்கள் மட்டுமல்ல. சிறைக் கொட்டடி சித்திரவதைப் படுகொலைக்கு எதிராக நியாயம் கோரிய மக்கள்; பாரம்பரியக்கடற்கரையில் குடியிருந்து மீன்பிடிக்கும் உரிமை கோரிய மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவையெல்லாம் சட்ட—ஒழுங்கை நிலைநாட்ட மேற்கொண்ட நடவடிக்கைகள் என்று சொல்லி போலீசார் நியாயப்படுத்தலாம். ஆனால் போலீசாரின் தனிப்பட்ட குரோதத்தைத் தீர்த்துக் கொள்ளவும், அவர்களுடைய ஏகபோக அதிகாரத்தை ஏற்க மறுப்பவர்களைத் தண்டிக்கவும் போலீசார் நடத்திய வெகுஜனப் படுகொலைகளுக்கு ஏராளமான சான்றுகள் உண்டு. அதே போல முதலாளிகள் — நிலப்பிரபுக்கள், பெரு வியாபாரிகளிடம் கூலி வாங்கிக் கொண்டு வெகுஜனப் படுகொலைகள் செய்து கிராமங்களையும், தொழிலாளர் குடியிருப்புகளையும் சூறையாடிய சம்பவங்களும் ஏராளமாக உண்டு.

நக்சல்பாரிப் புரட்சியாளர்களையும், பல்வேறு தேசிய இன விடுதலை வீரர்களையும், சீக்கிய தீவிரவாதிகள், கொள்ளைக்காரர் என்கிற பெயரில் அப்பாவி மக்களையும் பிடித்து நிராயுதபாணிகளாக நிற்க வைத்து சுட்டுக் கொன்றுவிட்டு ''ஆயுதந்தாங்கிய கும்பலின் தாக்குதல்—போலீசுடனான மோதல்'' என்று கூறியதற்கும் ஏராளமான சாட்சியங்கள் உண்டு. சிறைக் கொட்டடிகளில் சித்திரவதை படுகொலைகள் ஆண்டுக்கு ஆண்டு ஏறிக் கொண்டே போகிறது. ஆங்கிலேயரின் 400 ஆண்டுகால காலனிய ஆட்சியில் நடந்ததைவிட அதிகமான துப்பாக்கி சூடுகள், சிறைக் கொட்டடிக் கொலைகள் போன்ற போலீசுப் படுகொலைகள் கடந்த 40 ஆண்டுகளில் நடந்துள்ளன.

## காமவெறிக் கும்பல்

நாட்டிலுள்ள அத்தனை சமூக விரோதிகள், கிரிமினல்குற்றவாளிகள் செய்துள்ள கற்பழிப்புகளை விட அதிகமாக போலீசார் கற்பழிப்புகள் நடத்தியுள்ளனர். ஏதாவது ஒரு சிறு சாக்குக் கிடைத்தால் போதும் கிராமங்களுக்குள்ளும், நகரக் குடியிருப்புகளுக்குள்ளும் புகுந்து கும்பல் கற்பழிப்புகள் செய்வது வழக்கமாகிவிட்டது.

இந்த ஆண்டில் மட்டும் பீகாரில்—பராரியா, அசாமில் பூம்கா, திரிபுரா — மிஜோரம் ஆகிய மாநிலங்களின் கிராமங்களில் புகுந்து ஆண்களை தாக்கி விரட்டிவிட்டு கும்பல் கும்பலாகக் கற்பழிப்புகள் செய்துள்ளனர். இப்படி ஆண்டுதோறும் நடக்கிறது. பஸ் மோதி இறந்தவருக்கு நஷ்டஈடு கோரிய உ.பி.—நாராயண்பூர் கிராம மக்களையும், தங்கள் ஊருக்கு பஸ்விடக் கோரிய கேரள—தங்கமணி கிராமமக்களையும் தாக்கி, சூறையாடியதோடு கும்பல் கற்பழிப்பு செய்து காம வெறியாட்டம் போட்டனர். குறிப்பாக தாழ்த்தப்பட்ட பெண்களும், ஆதிவாசி— மலைவாழ் சாதிப் பெண்களும் இவர்களின் கற்பழிப்புக் காமவேட்டைக்கு அதிகமாகப் பலியாகிறார்கள்.

எல்லாவற்றிலும் கொடூரமானது '86 ஆகஸ்டில் கேரளாவில் நடந்தது. அங்கே மலபுரம் மாவட்டம் எஸ்டேட்—பண்ணை முதலாளி ஒருநாள் குடி கூத்தோடு கும்மாளமடிக்க எண்ணினார். அப்பப்பாரா கிராமத்துக்கு பெரிய போலீசு அதிகாரிகள் உட்பட ஒரு போலீசு கும்பலோடுபோனார்கள். ஆதிவாசிப் பெண்களை இழுத்து வந்து சாராயம் ஊற்றி, நள்ளிரவில்—நிலவொளியில் நிர்வாணமாக ஆட வைத்து வக்கிரமாக ரசித்ததோடு அவர்களைக் கற்பழித்தனர். தங்கமணி—அப்பப்பாரா—கொடுமைகளை பிரச்சாரம் செய்தே ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அவற்றின் விசாரணைத் தீர்ப்புகள் வந்தும் குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை. இவர்கள்தான்போலீசை சீரமைக்கும்படி இங்கே கோருகிறார்கள்.



தேசத் துரோக குற்றத்தின்கீழ் கைது செய்து சிறைமிடப்பட்ட பாலவேல். முற்போக்கு இளைஞர் அணியின் செயல் வீரன்

தனியாக ஒருபெண் சிக்கிவிட்டால் காமவெறிபிடித்த போலீசு மிருகங்கள் அவர்மீது பாய்ந்து கற்பழித்த சம்பவங்களோ ஏராளம். உலகிலேயே அதிக அளவு சிறைக் கொட்டடிக் கற்பழிப்புகள் இந்த நாட்டிலேதான் நடக்கின்றன. இரவிலோ பெண் போலீசு துணை இல்லாமலோ பெண் கைதிகளை பூட்டி வைக்கக்கூடாது என்று விதியிருப்பினும் அது மீறப்படுகிறது. போலீசு காமவெறியர்களின் கற்பழிப்புகளுக்குப் பெண் போலீசாரே உடந்தையாயிருக்கின்றனர். அவர்களும்கற்பழிக்கப் படுகின்றனர்.

## குரூரமும் வக்கிரமும் கொண்ட கும்பல்

போலீசார் கொலை வெறியும், காம வெறியும் பிடித்த மனித மிருகங்கள் மட்டுமல்ல, குரூரமும் வக்கிரமும் நிறைந்த கயவர்கள். இவர்கள் வெறுமனே கொலை செய்வது மட்டுமில்லை. புதிய புதிய காட்டுமிராண்டித்தனமான சித்திரவதை முறைகளை மேற்கொள்ளுகின்றனர். கண்களைத் தோண்டி கொதிக்கும் தார் டிரம்மில் போட்டுக் கொன்றதும், ஆணுறுப்புகளை நசுக்கிக் கொன்றதும், பெண்ணுறுப்புகளில் ரூல் தடிகளைச் சொறுகி துன்புறுத்துவதும் இவர்கள் ரசிக்கும்—விரும்பும் முறைகள். கேரளத்திலும் ஆந்திராவிலும் புரட்சியாளர்களுக்கு எதிராய் இப்படிச் செய்துள்ளனர்.

உ. பி. பாக்பாட் நகரில் ஒரு திருமணக் குடும்பத்தினரை மடக்கி ஆண்களை சுட்டுக் கொன்றுவிட்டு மாயாதியாகி என்ற கர்ப்பிணிப் பெண்ணை நிர்வாணமாக்கி அவளது பொண்ணுறுப்பில் ரூல்தடியை ஏற்றினர்; நிர்வாணமாகவேதெருத்தெருவாகஇழுத்துப் போனார்கள். பிறகு கும்பலாகச் சேர்ந்து கற்பழித்தார்கள். உத்திரப்பிரதேசத்தில் கர்ப்பிணியான ஒரு கொள்ளைக்காரியைச் சுட்டுக் கொன்று நிர்வாணமாக்கி மாட்டு வண்டியில் வைத்துப் பிணத்தைக் கட்டி கிராமம் கிராமமாக ஓட்டிப் போய் பய பீதியைக் கிளப்பினார்கள். தாயையும் மகனையும், தந்தையும் மகளையும், சகோதரனையும், சகோதரியையும் நிர்வாணமாக்கி உடலுறவு கொள்ளும்படி சித்திரவதை செய்து கண்டு ரசிக்கும்மளவு வெறி பிடித்தவர்கள் போலீசார். பெண் போலீஸ்காரிகளே இப்படிச் செய்த சம்பவங்கள் கூட கூற முடியும்,

போலீசாரின் குரூர—வக்கிர வெறிக்கு இன்னும் சில சான்றுகள் —கிரிமினல் குற்றவாளிகளைப் பிடித்து சட்டம் ஒழுங்கை நிலை



படிப்பகம்

www.padippakam.com

நாட்டுவதாக கூறிக் கொண்டு செய்த அக்கிரமங்கள். பாகல்பூரில் 32 அப்பாவி இளைஞர்களைப் பிடித்து சைக்கிள்கம்பியினால்கண் களைக் தோண்டி திராவகத்தை ஊற்றினார்கள். கான்பூரில் 25 அப்பாவி இளைஞர்களைப்பிடித்து கால் முட்டிகளை உடைத்து முட மாக்கினார்கள். காசியில் 12 அப் பாவி இளைஞர்களைப் பிடித்து ஆணுறுப்புகளில் மின்சாரம் பாய்ச் சி ஆண்மையிழக்கச் செய்தனர். இந்தக் குரூர—வக்கிரக் குற்றங் களுக்குக் காரணமான போலீ சார் யாரும் தண்டிக்கப்படவே இல்லை.

## அதிகார வெறிபிடித்த சட்டவிரோத கும்பல்

ஏற்கனவே அதிகாரத் திமிர் பிடித்த போலீசுக் கும்பல் மேலும் மேலும் புதிய அதிகாரங்களை சட்டபூர்வமாகப் பெறுவதற்காகத் தொடர்ந்து நிர்ப்பந்திக்கிறது. நீதி மன்றங்களுக்குக் கொண்டுபோகா மல் போலீசே நேரடியாகத் தண் டிக்கும்படியான அதிகாரங்களை எடுத்துக் கொள்கிறது. சாதாரண சாலைப் போக்குவரத்து முதல் கலவரப் பகுதி சட்டம், பயங்கர வாதத் தடுப்புச் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற பல சட்டங்கள் வரைமுறையே இல் லாத அளவு போலீசுக்கு அதிகா ரத்தைக் கொடுத்துள்ளது. அவற் றைக் கேடாகக்கூடபயன்படுத்திக் கொள்கிறது போலீசு. அப்பாவிப் பெண்கள், இளைஞர்கள், தொழி லாளர்கள் மட்டுல்ல சிறுவர் களைக் கூட இந்தச் சட்டங்களுக் குக் கீழே தண்டிக்கிறது.

அதே சமயம் சட்டவிரோத மாக போலீசார் நடந்து கொள் ளும் சம்பவங்களே ஏராளம். கைது செய்யப்பட்டவர்களை நீதிபதிகள் முன் நிறுத்தாது சிறைக் கொட் டடிகளிலேயே பல நாட்கள் பூட்டி வைக்கின்றனர். சாட்சியங்களை போலியாகத் தயாரித்து அப்பாவி களைத் தண்டிக்கின்றனர். குற்ற வாளிகளைத் தப்புவிக்கின்றனர். இவை பற்றி எல்லாம் சாதாரண மக்கள் மட்டுமல்ல, வழக்கறிஞர் கள் கேட்டால் கூட "என்னிடமே சட்டம் பேசுகிறாயா?" என்று கேட்டுத் தாக்குகின்றனர்.

பொய் வழக்குகள் போடு வதை வாடிக்கையாகக் கொண்ட போலீசார் இந்திரா கொலை வழக் கிலேயே ஒரு அப்பாவி சீக்கியரை பிடித்து தூக்குத் தண்டனை வாங் கிக் கொடுத்தனர். கடைசி நேரத் தில் உச்சநீதிமன்றத்தினால் அவர் தப்பினார். நீதிமன்றங்களில் பொய்ச் சாட்சிகள் சொல்வதற் கென்றே ஒரு கும்பலைத் தீனி போட்டு வளர்க்கிறார்கள். தலை நகர் புதுடில்லியில் குடிகண்ணீர் விற்றுக் கொண்டிருந்தவனை 3000 வழக்குகளில் 6 ஆண்டுகள் பொய் சாட்சி கூற வைத்தனர். வசதி வந்த பிறகு அவன் மேலும் பொய் சாட்சிகூற மறுக்கவே அவ னை ஊரைவிட்டு வெளியேறும்படி உத்திரவு போட்டனர். பிறகு 'மிசா'வில் உள்ளே தள்ளினர். நீதிமன்றத்தில் அவன் பழைய உண்மைகளைச் சொல்லித் தப்பித் தான்.

## லஞ்சஊழலும் அற்பத்தனமும் நிரம்பி வழியும் கும்பல்

போலீசின் லஞ்ச ஊழல் மிக வும் பிரசித்தி பெற்றது. வழக்க மான கிரிமினல் குற்றவாளிகளி டம் மாமூல் வசூல் செய்து அடி முதல் முடிவரை ஒரு விகிதாசாரப் படி பகிர்ந்து கொள்ளுகின்றனர். கள்ளச் சாராயம், கள்ளச் சந்தை, விபச்சாரம், சூதாட்ட விடுதிக் காரர்கள் மட்டுமல்ல, சட்டபூர்வத் தொழில் செய்யும் வியாபாரிகளை யும் அவர்கள் விடுவதில்லை.

மாமூல் தவிர அவ்வப்பொழுது வரும் கைதிகளிடமும் வழக்கு களை தள்ளுபடி செய்யவும், பிணையில் விடவும், அப்படிச் செய்வதாக மோசடி செய்தும் வசூல் செய்கின்றனர். லஞ்சமாக இதுதான் வாங்குவது என்றில்லை. சிகரெட்டு, டீ, சாராயம்கூடவாங்கு மளவு அற்பத்தனமானவர்களாக உள்ளார்கள், இன்னாரிடம்தான் லஞ்சம் வாங்குவது என்பது கூட இல்லாமல் பிச்சக்காரர்களைக் கூட விரட்டி லஞ்சம் வாங்குகிறார் கள். இதெல்லாம் போதாது என்று அப்பாவி இளைஞர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு, பொய் வழக்குப் போட்டுவிடு வேன் என்று மிரட்டியே காசுபறிக் கிறார்கள்.

சென்னை—புறநகர் மருத்துவ மனை அருகே பழைய வார, மாதப்பத்திரிக்கைகள், கதை புத்தகங்களைப் பகுதி நேரமாக விற்கும் ஒரு கூலித் தொழிலாளி கூறுகிறார், "இதுலே என்னங்க வருமானம் வரும். ஒரு நாளைக்கு அஞ்சோ, ஆறோ கிடைக்கும். திடீருண்ணு ரெண்டு போலீசுங்க வர்றாங்க, கொஞ்சம் விலை போகக்கூடிய சினிமாப் பத்திரிக் கைகள், மர்ம நாவல் புத்தகங் களை பதினஞ்சு, இருபதுன்னு அள்ளிக்கிட்டுப் போயிடறாங்க. கேட்டா, செக்ஸ் புத்தகம் வித் தின்னு உள்ளே தள்ளிடுவேன்னு மிரட்டறாங்க" என்கிறார். இப்படி நடைபாதையில் பழம், காய்கறி, சிறு துணிமணிகள், பிளாஸ்டிக் பொருட்கள் விற்பவர்களிடம் சட்டபூர்வ உரிமையாகக் கருதி அள்ளிக் கொண்டு போகிறது போலீசு கும்பல்.

கள்ளச்சாராயம், விபச்சாரம், சூதாட்ட விடுதிக்காரர்களிலிருந்து சிறுவியாபாரிகள் வரை இப்படி லஞ்சம் — மாமூல் தருவதோடு மாதம் ஒரு வழக்கில் தாமே பிடி பட்டு போலீசு சட்டப்படி நட வடிக்கை எடுப்பதாகவும் காட்ட வேண்டும். போலீசு நிலையத்திற்கு வரும் விபத்துக்குள்ளான வாக னங்கள் — பொருள்கள், திருடு போன நகைகள்—பொருட்கள் போன்ற எதையும் முழுமையாக— உருப்படியாகத் திரும்பப் பெற முடியாது. அவற்றில் தங்களுக் குரிய பங்கை போலீசார் உரிமை யோடு எடுத்துக் கொள்கிறார்கள்.

## சமூக விரோதிகளின் பங்காளிகள்;

"ஆட்டோ" சங்கரோடு தமிழகபோலீசார் பங்கும், கூட்டும் வைத்திருந்ததாக இப்போது வெளியாகி உள்ளதே அது ஒரு சிறு துளிதான். ஆயிரம் "ஆட்டோ" சங்கர் அளவு பெரிய சமூக விரோதத் கிரிமினல் மஃபியா குண்டர்கள் ஒவ்வொரு நகரிலும் உள்ளார்கள். வரதராஜ முதலியார், கரீம் லாலா, அகமது இப்ராகிம் போன்றவர்கள் அவர் கள். அனைவரும் எல்லா மட்ட போலீசாரோடும் கூட்டு வைத் திருப்பதற்கான "வீடியோ" பட ஆதாரங்கள் அரசாங்கத்திடம் உள்ளன. இவர்களின் சமூக விரோத — கிரிமினல் குற்றங் கள் அனைத்தும் போலீசின் கூட் டோடுதான் நடக்கின்றன. போலீ சுக்காரர்களே கொள்ளை மற்றும் கடத்தல் போன்ற கிரிமினல் குற்றங்களை செய்து வருவதற் கான சான்றுகளும் ஏராளமாக உண்டு.

கொள்ளைக்காரர்கள், ஜேப் படி திருடர்கள், தொழில் முறைக் கொலைகாரர்கள் அனைவரும்

போலீசுக்காரன்களால் கற்பழிக்கப் பட்டுநிர்வாணமாக இழுத்துப்போ கப்பட்டமாயாதியாகி.





படிப்பகம்

www.padippakam.com

போலீசுக்கு மாமூல் கட்டுவதோடு பங்கும் கொடுக்கின்றனர். தர்மபுரி—தளி ஆசிரியை கற்பழிப்பு வழக்கில் போலீசுக்கு உடந்தையாய்இருந்ததுஇருபெண்கள்.அந்த ஆசிரியையை தாக்கி கடத்திவந்த லட்சுமி. தளி போலீசு நிலைய விபச்சாரியும், நிர்வாண சினிமா, சாராயம் போன்றவை ''சப்ளை'' செய்த ராஜம்மா — இப்படிப் எடுபிடிகள்—தரகர்கள்— மாமாக்கள் இல்லாத போலீசு நிலையங்கள் ஏதாவது உண்டா? ஒவ்வொரு கிராமத்திலும், நகரின் ஒவ்வாரு தெருக்களிலும் போலீசாரின் கைக்கூலிகள் இருக்கிறார்கள்.

அப்பாவி இளைஞர்களைப் பிடித்து சித்திரவதை செய்து சாகடிக்கும் ஒவ்வொரு வழக்கிலும் அவர்கள் ''ரெளடிகள்'' என்று நிருபிப்பதற்காக தமது சகபாடிகளான ரெளடிகளை சாட்சியங்களாக வைத்து வழக்குகள் ஜோடிக்கின்றனர். அப்பாவிப் பெண்களைப் பிடித்து சிறைக் கொட்டடிகளில் கற்பழிக்கும் ஒவ்வொரு வழக்கிலும் அவர்கள் ''விபச்சாரிகள்'' என்று நிருபிப்பதற்காக விபச்சாரத் தரகர்களை சாட்சியங்களாக வைத்து வழக்குகள் ஜோடிக்கின்றனர். போலீசாருக்கும் சமூக விரோதிகளுக்கும் உள்ள கூட்டு—உறவு பற்றிய உண்மைகளை இந்த வழக்குகளே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இப்படி அக்கிரமங்கள், அட்டகாசங்களின் மொத்த உருவமான போலீசுத் துறையைத் திருத்தி சீரமைத்து, மக்களின் நம்பிக்கைக்குரியதாக மாற்ற முடியுமா? ஆதியிலே சரியான—ஒழுங்கான அமைப்பாக இருந்து இப்போதுதான விரும்பத் தகாத சக்திகள் ஊடுருவி, தவறான போக்குகள் தலைதூக்கிவிட்டனவா? இல்லை திருந்தவே திருந்தாத, அடிப்படையிலேயே கொடிய மக்கள் விரோத ஜனநாயக விரோத அமைப்பா?

தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்றும், முற்போக்கு சிந்தனையாளர்கள் என்றும் கூறிக் கொள்ளும் போலிகள் தெரிந்தே போலீசைப் பற்றி பிரமையை உருவாக்கவும் பாதுகாக்கவும் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் போலீசு பற்றி மார்க்சிய—லெனினிய ஆசான்கள் தந்துள்ள போதனைகளும், மக்களுடைய அனுபவமும் காட்டுவது என்ன?

அடக்குமுறையும் சுரண்டலும் ஆதிக்கம் வகிக்கும் எல்லா நாடுகளிலும் ஆளும் வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள அதிகார வர்க்கம், இராணுவம், நீதிமன்றம் சிறைத்துறை போன்ற அடக்குமுறை—வன்முறைக் கருவிகளில் ஒன்றுதான் போலீசு. அரசு எந்திரத்தின் மிக முக்கிய அங்கம். பரந்துபட்ட மக்களை அடக்கி ஒடுக்குவதற்கென்றே அதிகாரத் தீனி போட்டு பயிற்சியளித்து வளர்க்கப்பட்டுள்ள தனி ஜாதி. எனவேதான்மக்கள் விழிப்புணர்வு பெற்றுப் போராடுவதற்கு ஏற்ப அந்த ஜாதியினர் ஊதிப்பெருக்கப் படுகின்றனர். நாடு முழுவதும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட போலீசார் இருக்கிறார்கள். அது போதாது என்று பல மத்தியபோலீசும் துணைப்படைகளும் உருவாக்கப்படுகின்றன. அதிநவீனக்கருவிகள்—ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. ஐ.ஜி. உயர் போலீசு அதிகாரி தலைமையிலிருந்த தமிழ்நாட்டில் மூன்று டி.ஜி.பிக்களும் 8 ஐ.ஜிக்களும் 32 டி.ஐ ஜிக்களும் மூன்று மடங்கு போலீசுமாக கடந்த எட்டாண்டுகளில் ஊதிப் பெருக்கினர். இதுதான் நாடு முழுவதும் உள்ள நிலைமை.

ஆளும் வர்க்கங்களின் அடக்குமுறை, சுரண்டலைப் பாதுகாப்பதற்கான முக்கியமான வன்முறைக் கருவி என்பதால்தான் போலீசு எவ்வளவு அக்கிரமங்கள்—அட்டகாசங்கள் செய்தாலும் அவர்கள் செல்ல நாயாக அதிகாரச் சலுகைகள்—உரிமைகளைக் கொட்டி வளர்க்கிறார்கள்.

எனவே போலீசைத் திருத்துவது, சீரமைப்பது, மக்கள் நம்பிக்கைக்குரியதாக மாற்றியமைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. அதிகார போதை தலைக்கேறிய திமிர் பிடித்த—மக்களின் ரத்தம் குடித்து ருசி பார்த்துப் பழகிய போலீசை—சமாதான பூர்வமாக —அமைதி வழியில் கலைத்து விட்டு சட்ட—ஒழுங்குக்கான வேறொரு நிறுவனத்தைக் கட்டி அமைப்பதுகூட முடியாது. போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலங்களில் அவ்வாறு செய்ய முயன்றிருக்கலாமே! முயன்றால் தெரியும்! எவ்வளவு வெறியோடு பாய்ந்து அவர்களைச் சின்னா பின்னப் படுத்திவிடும் என்கிற உண்மை!

ஆகவே, போலீசின் அக்கிரமங்கள்—அட்டகாசங்களை முடிவுக்குக் கொண்டு வர ஒரே வழிதான் இருக்கிறது. அதிகார வர்க்கம், இராணுவம், நீதிமன்றம், சிறைத்துறை போன்ற வன்முறை அரசு எந்திரத்தின் பிற பகுதிகளோடு சேர்த்து போலீசையும் புரட்சியின் மூலம் தகர்ப்பது தவிர வேறு வழி கிடையாது. மக்கள் அனைவரும் ஆயுதமேந்தும் உரிமை, மக்கள் குடிப்படை, தேர்ந்தெடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் கமிட்டிகளுக்கே சட்டம் ஒழுங்கு உட்பட அனைத்து நிர்வாக உரிமைகளும் என்கிற ஒரு புதிய அரசு அமைப்பு மட்டுமே இப்படிப்பட்ட அக்கிரமங்கள்—அட்டகாசங்களை ஒடுக்க முடியும்.

● ஆர். கே.

## பெங்களூரில் ஒரு அமைதிப்படை

கர்நாடகப் போலீசாருக்கு ஆட்களைக் கடத்துவதென்பது கைவந்த கலை. ஏற்கனவே கேரள வக்கீல் ரஷீதைக் கடத்தி கொலை செய்து 'புகழ் பெற்ற' சட்டபூர்வ கிரிமினல் பேர்வழிகள் அவர்கள். இப்போதுதமிழகத்தின் காக்கிச் சட்டை கயவாளிகளுடன் சேர்ந்து கொண்டு, இந்திய அமைதிப் படையின் அக்கிரமங்களுக்கு எதிராகக் குரல் கொடுந்த புரட்சிகர இயக்கத்தின்மீதும் பாயத் தொடங்கியுள்ளனர்.

கருநாடகத்தின் தலைநகர் பெங்களூரில் இயங்கி வரும் புரட்சிகர இளைஞர் மையம் (PYC) என்ற அமைப்பின் மாநிலச் செயலாளர் வீரமணியை கடந்த ஆகஸ்ட் 25 அன்று சீருடையணியாத தமிழக—கர்நாடக ரகசிய போலீசார் ஒரு காரில் கடத்திச் சென்றனர், அவருடனிருந்த அவ்வமைப்பின் பெங்களூர் நகரச் செயலர் வெங்கடேஷ் அதைத் தடுத்து எதிர்ப்பும் தெரிவித்துள்ளார். அதன் பிறகு வெங்கடேசையும் இவ்வமைப்பின் சில செயல் வீரர்களையும் கருநாடகப் போலீசார் கைது செய்து போலீசு நிலையத்தில் கொடூரமாக சித்திரவதை செய்துள்ளனர். ''இதைப் பற்றி வாயைத் திறந்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும்'' என்று மிரட்டிவிட்டு, வழக்கு ஏதும் பதிவு செய்யாமல் அடுத்த நாளே விடுதலை செய்தனர்.

ஆனால் இன்றுவரை வீரமணி என்ன ஆனார் என்ற விபரம் இன்னமும் தெரியவில்லை. போலீசு கும்பலோ தங்களுக்கு இதில் அறவே சம்பந்தமில்லை என்று அப்பட்டமாக புளுகுகிறது.

ஈழத்தில், இந்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் சிவிலியன்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்வது அமைதிப் படையின் தொழிலாக இருந்தது. இப்போது அதே வேலையை இந்தியாவிலும் தொடங்கி விட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com




# விளை நிலங்களைப் பாலைவனமாக்கி விவசாயிகளுக்கு குளிர்பான விநியோகம்

இதுவரை இந்தியனின் மலிவான மனித உழைப்பையும், நாட்டின் கச்சாப் பொருட்களையும் சூறையாடி வந்த பன்னாட்டு நிறுவனங்கள் இன்று நேரடியாக விவசாயத் துறையையும் கட்டுப்படுத்த கிளம்பிவிட்டன. பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் உற்பத்தி, குளிர்பானத் தயாரிப்பு மற்றும் விவசாய ஆய்வு மையம் என்ற துறைகளில் உற்பத்தி, ஆராய்ச்சி நடத்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் திட்டமிடப்பட்ட 'பெப்சிகோ' என்ற அமெரிக்கப் பன்னாட்டு பகாசுரக் கம்பெனியுடனான ரூ 22 கோடி திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பெரும் தரகு நிறுவனமான வோல்டாஸ், பஞ்சாபிலுள்ள புதிய நவீன, முதலாளித்துவ நிலப்பிரபுக்களின்கூட்டமைப்பான பஞ்சாப்—விவசாய—தொழில் கழகம் இவை 'பெப்சிகோ'வுடன் கூட்டு சேர்ந்துள்ளன.

பஞ்சாபில் 2 கோடி ரூபாயில் ஆராய்ச்சி மையம் தொடங்கப்படுகிறது. முதலில் உருளைக் கிழங்கு உற்பத்தியைப் பெருக்க புது வீரிய ஒட்டு வகைகளை அறிமுகப்படுத்துவதாகச் சொல்கின்றனர். இதுவரை தனியார் நிறுவனங்கள் புதிய விதைகள், செடிகளை அறிமுகப்படுத்தும்போது அதற்கென விவசாயிகளிடமிருந்து (ராயல்டி) பங்குவீத உரிமை வசூல் செய்கின்றன. அதே நடைமுறை இங்கும் இருப்பதற்கான வாய்ப்பே அதிகம்.

புதிய பயிர், விதைவகைகளை அறிமுகப்படுத்தும்போது அவை எந்த மூலத்திலிருந்து உருவாக்கப்பட்டவை என்பது தெரிந்தால் தான் மேற்கொண்டு அவற்றை பாதுகாப்பது, மேலும் புதிய வகைகளை உருவாக்குவது என்பவை சாத்தியம். இதை 'பெப்சிகோ', தொழில் ரகசியம் எனக் கூறி மூல வகையினை மூடி மறைக்கலாம்.

அப்படி மறைக்கும் என்பதே உண்மை. இதன்படி இதுவரை பாரம்பரியமாகவும் சிறுது விஞ்ஞான முறையிலும் கொஞ்சநஞ்சம் வளர்ந்து வந்த இந்திய விவசாயம் பன்னாட்டு பகாசுரக் கம்பெனியால் முழுவதுமாக முடக்கப்படும். இந்திய விவசாயி எதைப் பயிரிடுவது என அவன் தீர்மானிப்பதற்கு பதில் இனி 'வாஷிங்டன்' திட்டமிடும்.

புது வகை விதைகளை அறிமுகப்படுத்தும்போது புதிய தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கான ஷரத்துக்கள்ஏதும் ஒப்பந்தத்தில் இல்லை. ஏற்கனவே பி. எல்; 480 என்ற திட்டத்தில், உதவி என்ற பெயரில் அமெரிக்கா கோதுமை இறக்குமதி செய்தது. அதனுடன் கூடவே பார்த்தீனியம் என்ற விஷச் செடியும் பரப்பப்பட்டது. இப்பார்த்தீனியத்தால் ஆஸ்துமா, டி.பி., புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகள் பரப்பப்பட்டன. இன்று வரை இந்த பார்த்தீனியம் என்ற நச்சுச் செடி கட்டுப்படுத்த முடியாமல் பல்கிப் பெருகி பலரையும் பாதித்து வருகிறது. இப்படி நடக்காமல் தடுக்க ஒப்பந்தத்தில் வழிவகை இல்லை.

இந்த புதிய வீரிய வகைகள் எதிர்பார்த்த பலனளிக்க வேண்டுமென்றால் 'பெப்சிகோ' குறிப்பிடும் உரம், பூச்சி மருந்துகளை உபயோகிக்க வேண்டும். பசுமைப் புரட்சி என்ற பெயரில் அமெரிக்காவில் காலாவதியான பழைய எந்திரங்கள், உரம், பூச்சி, மருந்துகள் நமது தலையில் பெரும் லாபத்துடன் கட்டிவிடப்பட்டதை இதற்குள் நாம் மறந்திருக்க நியாயமில்லை. இங்கும் நிலத்தை நஞ்சூட்டக்கூடிய உரம், பூச்சி மருந்துகளே நமது தலையில் கட்டிவிடப்படும். பின் பயிர் நிலம் பாலைவனமாய் மாற அதிக காலம் ஆகாது. ஆராய்ச்சி மையத்தால் இத்தனை விளைவுகள்.

பதனிடப்படும் தொழிலில் உருளைக்கிழங்கு, பேரிக்காய் மட்டுமே முதலில் பயன்படுத்தப் போகின்றனர். இருக்கின்ற பழவகைகளிலிருந்து பழரசம் தயாரித்து ஏற்றுமதி செய்யப்பட்டுவிடும். ஊட்டச் சத்து ஏதுமற்ற பெப்சிகோலாதான் நமக்குகிடைக்கும்.

மூன்றாம் உலக நாடுகளின் விவசாயத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் அக்கறை பற்றி பீற்றிக் கொள்ளப்படுகிறது. இதோ சில புள்ளி விவரங்கள்.

● கேம்ப கோலா, பெப்சி கோலா—இரு பகாசுர குளிர்பான நிறுவனங்கள் சர்க்கரையைவிட 2500 மடங்கு சுவையுள்ள செயற்கை சர்க்கரை தயாரித்து விற்பனை செய்ய உள்ளனர் மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமே பயிராகும் கரும்பு இனி விலை போகாது.

● நெசல், காட்பரீஸ்—இந்த பன்னாட்டு நிறுவனங்கள் கோகோ வெண்ணெய் செயற்கையாக உற்பத்தி செய்யப் போவதாக அறிவித்துள்ளன. பிரேசில், கானா நாடுகளில் கோகோ பயிரிடுபவர் வாழ்க்கை அதோ கதிதான்.

● இறைச்சிக்கான பறவைகள் வளர்க்கும் அமெரிக்க திட்டத்தால் அமேசான் நதிக்கரை காடுகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன.

இதுபோல் இன்னும் பல்வேறு திட்டங்கள் மூன்றாம் உலக மக்களின் விவசாயத்தில் மண்ணள்ளிப் போடுகின்றன.

இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் நிச்சயமாக விவசாயத்தை முழுதும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிடும். இவர்களின் தேவைக்கான உற்பத்திப் பின்னிலமாக இந்தியாவை மாற்றிவிடும். இன்று 'பெப்சிகோ', நாளை இன்னும் பல பகாசுரக் கம்பெனிகள்.


படிப்பகம்

www.padippakam.com

# நீதிதேவன் 'மயக்கம்!'


சென்னையில் 'ஒரு சி பி ஐ டைரிக் குறிப்பு' என்ற மலையாளத் திரைப்படம் 150 நாட்களுக்கும் மேலாகத் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு இளம் பெண் மர்மமான முறையில் கொல்லப்பட்டதை மாநிலப்போலீசார் தற்கொலை என்று கூறி வழக்கம் போலவே குற்றவாளிகளைத் தப்புவித்து வழக்கை அமுக்கிவிடும்போது, பெண்ணின் தந்தை உச்ச நீதி மன்றத்துக்கு நீதி கேட்டு விண்ணப்பிக்கிறார். உச்ச நீதி மன்றம் சாதாரணக் குடிமகனுக்கும் வழுவாமல் நீதி வழங்கும் பொருட்டு அவரது மனுவை ஏற்று, மத்தியப் புலனாய்வுத் துறையை (சி. பி. ஐ) ஏவி வழக்கைத் துருவித்துருவி, திறமையாக ஆராய்ந்து குற்றவாளிகளைக் கைது செய்து நீதியை நிலைநாட்டுவதாக கதை போகிறது.

இத்திரைப் படத்தைப் பார்ப்பவர்கள் உச்சநீதி மன்றம் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, நீதித் தராசு முள் எள்முனையளவும் எந்தப் பக்கமும் சாயாமல் நடுநிலையாக நின்று சாதாரண குடிமகனுக்கும்கூட நீதியை வழுவாமல் நிலைநாட்டும் உன்னதமான அமைப்பாகக் கருதுவார்கள்.

ஆனால் உச்ச நீதி மன்றம் ஆளும் கும்பலுக்கு விசுவாசமாகவும், அதிகாரவர்க்க-போலீசு ராணுவ கும்பலுக்கு சாதகமாகவும் சாதாரண குடிமகனுக்கு எதிராகவும் அநீதியாகவும் வஞ்சகமாகவும் தீர்ப்பு வழங்கிய வழக்குகள் ஏராளம். இதை மீண்டும் நிரூபிக்கும்வகையில், சமீபத்திய இரண்டு வழக்குகள் நீதித்துறையின் முகவிலாசத்தை பளிச்சென படம் பிடித்துக் காட்டுகின்றன.

சமூக சேவகியும் பத்திரிக்கையாளருமான ஷீலா பார்ஸ் என்பவர் நாடெங்கும் சிறையிடப்பட்டுள்ள 1400 இளஞ்சிறுவர்களை உடனடியாக மறுவாழ்வு இல்லத்திற்கு அனுப்பக் கோரி 1985 செப்டம்பரில் உச்ச நீதி மன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு கடந்த மூன்றாண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே போனது. கடந்த ஜூலை 1988 முடிய இதுவரை 24 தடவை அந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கின் அடிப்படையில் மத்திய—மாநில அரசுகளுக்கும், மாவட்ட நீதி மன்றங்களுக்கும் மேலும் விபரங்கள் கோரி உச்ச நீதிமன்றம் கடிதம் அனுப்பியது. ஆனால் மத்திய—மாநில அரசுகளும் நீதித்துறையும் இதில் கடுகளவும் அக்கறை காட்டாததால் முடிவேயில்லாமல் வழக்கு நீண்டு கொண்டே போனது.

இதைத் தொடர்ந்து, இளஞ்சிறுவர்களுக்கு இழைக்கப்படும் இந்த அநீதியை விளக்கி ஜூலை 22ம் நாளன்று எக்ஸ்பிரஸ் நாளேடு ஒரு செய்திக் கட்டுரை வெளியிட்டது. அதன் பிறகு ஷீலா பார்சையும் அவரது மனுவையும் புறக்கணித்து பின்னுக்குத் தள்ளும் வேலைகள் ஆரம்பிக்கத் தொடங்கின. வழக்கு விசாரணையில் இருக்கும்போது அதைப்பற்றி வெளியே பத்திரிக்கைகளில் எழுதுவதும், பேட்டியளிப்பதும், பிரபலப் படுத்துவதும் நீதித் துறையை அவமதிக்கும்



குற்றமாகும் என்று எகிறிப் பாய்ந்து ஷீலா பார்சை மிரட்டத் தொடங்கினார், இவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளில் ஒருவரான ரங்கனாத் மிஸ்ரா. டெல்லியில் பாசிச இந்திராவின் படுகொலையடுத்து, சீக்கியர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொலை வெறியாட்டத்தில் காங்கிரசு கட்சிக்கு சம்பந்தமேயில்லை என்று ஆளும் கும்பலுக்கு விசுவாசமாகத் தீர்ப்பு வழங்கி 'புகழ் பெற்ற' நீதிபதி இவர்.

மூன்றாண்டுகளாக வழக்கை இழுத்தடித்து வருவதோடு, பொது நலன் கருதி மனு கொடுத்த தன்னையும் மிரட்டுவதைக் கண்டு எரிச்சலடைந்த ஷீலா பார்ஸ், ''பொது நலனுக்காக நேர்மையாக இறுதி விசாரணைக்கு உச்ச நீதி மன்றம் ஏற்பாடு செய்ய வேண்டும்; அல்லது எனது மனுவைத் திரும்பப் பெற்றுக் கொள்ள அனுமதிக்க வேண்டும்'' என்று கோரினார்.

நீதித்துறையின் அருகதையையே கேள்விக்குள்ளாக்கிய இப்புதிய திருப்பத்தைக்கண்டு எரிச்சலடைந்த உச்ச நீதிமன்ற நீதிபதி மிஸ்ரா, ''உங்கள் மனுவைத் திரும்பப் பெற அனுமதிக்க முடியாது. நீங்கள் வெளியே போங்கள். இனி நீங்கள் இந்த வழக்கை தொடர உரிமையில்லை'' என்று ஒருதலைப் பட்சமாக மறுத்தார். இதையடுத்து இவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளான மிஸ்ராவும், வெங்கடாசலய்யாவும் விடுத்துள்ள அறிக்கையில், ''இனி இவ்வழக்கைத் தொடர மனுதாரர் ஷீலாபார்சுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. இவ் இவ்வழக்கை இலவச சட்ட உதவிக் குழுவினர் ஏற்று நடத்துவர்'' என்று திமிராகக்கூறியுள்ளனர். பொது நலனை முன்னிட்டு ஒரு மனுதாரர் தொடுத்த வழக்கிலிருந்து மனுதாரரை விரட்டுவதென்பது நீதித்துறையின் வரலாற்றில் இதுவே முதன் முறையாக நடந்துள்ளது.

ஷீலா பார்ஸ் அப்படி என்ன குற்றம் செய்து விட்டார்? வழக்கு இழுத்தடிக்கப்படுவதால் விரக்தியுற்ற நிலையில் பத்திரிக்கைக்குப் பேட்டியளித்ததோடு, ஒன்று இறுதி விசாரணைக்கு நாள் குறியுங்கள் அல்லது என்து மனுவைத் திரும்பப் பெற அனுமதியுங்கள் என்றுதான் நீதித் துறையிடம் கோரினார். ஆனால் நீதித்துறை இரண்டையுமே நிறைவேற்றாமல் வழக்கையேதனக்குச் சாதகமாக மாற்றியமைத்துக் கொண்டுள்ளது. இது ஒருபுறமிருக்க இறுதி விசாரணை எப்போது நடைபெறும் என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே



படிப்பகம்

www.padippakam.com

உள்ளது. அதிகார வர்க்க—நீதித் துறையின் அக்கறையற்ற அலட்சியப் போக்கை மூடி மறைத்து தமக்கு சாதகமாக விசாரணை நடத்துவது என்ற முடிவுடன்தான் இந்த வழக்கு இன்னமும் கால வரையறையின்றி இழுத்தடிக்கப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் "நீதி வழங்குவது தாமதமானால் அது நீதியையே மறுப்பதாகும்" என்று நீதிபதிகள் தேய்ந்த இசைத்தட்டு போல அடிக்கடி ஒப்பாரி வைக்கின்றனர். ஆனால் நீதித் துறையின் அதிகார வர்க்கத்தின் சிவப்பு நாடா இழுத்தடிப்புகளால் நாடெங்கும் 1400 இளஞ் சிறுவர்கள் இன்னமும் சிறையில் வாடுகின்றனர். ஒரு நாள் இரு நாள் அல்ல; ஆண்டுக் கணக்கில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஷீலா பார்சை நீதிமன்றத்தை அவமதித்து விட்டதாகக் குற்றம் சாட்டி விரட்டிய அதேநீதித்துறை வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் நீதித்துறையை அவமதித்து ஆட்டம் போட்ட பெண் போலீசு அதிகாரி கிரண் பேடியிடம் கை கட்டி வாய் பொத்தி நின்று விசுவாசமாக சேவகமும் செய்துள்ளது.

வழக்கறிஞர் ஒருவரை நடுத் தெருவில் விலங்கிட்டு இழுத்துச் சென்று அவமதித்த டெல்லி உதவிப் போலீஸ் கமிஷனரும், இந்தியாவின் முதல் பெண் போலீசு அதிகாரியுமான கிரண் பேடியை எதிர்த்து கடந்த ஜனவரியில் டெல்லி வழக்கறிஞர்கள் போராடினர். போராட்டத்தை ஒடுக்க கிரண்பேடி ஏவிவிட்ட குண்டர்களும், இ. காங்கிரசு ரெளடிகளும் வழக்கறிஞர்களை வெறித்தனமாக அடித்து நொறுக்கினர். அதைத் தொடர்ந்து கிரண் பேடியை உடனடியாக பதவியிலிருந்து நீக்கக் கோரி ஏறத்தாழ இரண்டரை மாதங்களுக்கும் மேலாக டெல்லி வழக்கறிஞர்கள் போராடினர். டெல்லி மட்டுமின்றி வட மாநிலங்கள் முழுவதும் போராட்டம்பற்றிப் படர்ந்தது. அதைத் தொடர்ந்து நீதிபதிகள் கோஸ்வாமி, வாதா ஆகியோரைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டு விசாரணை தொடங்கியது.

விசாரணையின்போது, சாட்சிக் கூண்டில் நிறுத்தப்பட்ட கிரண்பேடி உறுதி மொழி ஏற்க மாட்டேன் என்று அடம் பிடித்தார். அடுத்து நடந்த விசாரணையிலும் அவ்வாறே செய்தார். அதைப் போலவே அவருடன் சேர்த்து குற்றஞ் சாட்டப்பட்ட போலீசு அதிகாரிகளும் உறுதி மொழி ஏற்க மறுத்தனர்.



"சட்டம் என் கையில்! நீதி என் பையில்!"—வழக்கறிஞர்களைத் தாக்கி, நீதித்துறையையும் அவமதித்து ஆட்டம்போட்ட டெல்லி பெண் போலீசு அதிகாரி கிரண்பேடி

'சட்டப்படி இது குற்றம். அதுவும் ஒரு அரசு ஊழியரும் உயர் போலீசு அதிகாரியுமானவர் இப்படி நடந்து கொள்வது மிக மோசமானது' என்று புலம்பிய விசாரணைக் கமிட்டி அவரிடம் விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்பியது. அதற்கும் கிரண் பேடி பதில் தர மறுத்து விட்டார்.

இதற்கிடையே அரசு தரப்பு தலைமை வழக்கறிஞரான ஜி. ராமசாமி, நீதித் துறையையும் சட்டத்தையும் அவமதித்த கிரண் பேடிக்குப் பரிந்து கொண்டு நியாயவாதங்களை அடுக்கத் தொடங்கினார். விசாரணை நடத்தும் முறையே விதிக்கு முரணானது என்று எகிறிப் பாய்ந்தார். போலீசு தரப்பை முதலில் விசாரிப்பது தவறு என்றும், வழக்கறிஞர்கள் தரப்பைத்தான் முதலில் விசாரிக்க வேண்டுமென்றும், எனவே கிரண் பேடிக்கு விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்பியது செல்லாது என்றும் வழக்கையே தலைகீழாக மாற்றினார்.

மொத்தத்தில் அரசே கிரண் பேடிக்கு அனுசரணையாக நின்று விசாரணையைச் செயலிழக்கச் செய்தது. கடைசியில் கிரண்பேடியைதற்காலிக பதவி நீக்கம்செய்யுமாறு பரிந்துரைத்ததற்குமேல், விசாரணைக் கமிட்டியால் வேறெதுவும் செய்ய முடியவில்லை. அந்த விசாரணைக் கமிட்டியின் அறிக்கையும் பகிரங்கமாக வெளியிடப்படாமல் முடக்கப்பட்டது. பதவி நீக்கம் என்ற பெயரில் கிரண் பேடிக்கு இப்போது டெல்லியின் போதை மருந்து தடுப்பு செயல் பிரிவின் இயக்குனராகப் பதவி உயர்வு அளித்து அரசு கௌரவித்துள்ளது.

பத்திரிக்கைக்குப் பேட்டியளித்து நீதித் துறையை அவமதித்து விட்டதாக ஷீலா பார்ஸ் மீது குற்றஞ்சாட்டிய உச்ச நீதிமன்றம், சட்டத்தையும் நீதித் துறையையும் பகிரங்கமாக அவமதித்து அகம்பாவத்துடன் நடந்து கொண்ட கிரண்பேடிமீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிபதி கோஸ்வாமிதான் எரிச்சலுற்று ராஜினாமா செய்ய வேண்டி வந்தது. அதேபோல வழக்கு விசாரணையிலிருக்கும் போது கிரண்பேடி பத்திரிக்கைகளுக்கு நீதித்துறையை வெளிப்படையாகச் சாடி பேட்டியளித்த போதும்கூட எதுவும் செய்யவில்லை. மாறாக, அரசே அவருக்காக வரிந்து கட்டிக் கொண்டு ஆதரவாக நின்றது. ஏனென்றால் கிரண் பேடி அரசு எந்திரத்தின் முக்கிய அங்கமான போலீசு துறையின் உயரதிகாரி. ஷீலா பார்ஸ் சாதாரண குடிமகள்தான். இருவரும் ஒன்றாகிவிட முடியுமா என்ன?

இதுதான் இந்திய நீதித் துறையின் லட்சணம். 'அரசு எந்திரத்தின் அங்கங்களான போலீசு, ராணுவம், அதிகார வர்க்கம், சிறை, நீதித்துறை முதலானவையும் சாதாரண குடிமகனும் ஒரு போதும் சமமாகிவிட முடியாது. அவர்கள் குடிமக்களுக்கும் மேலானவர்கள்; சட்டம் அவர்கள் கையில்; நீதி அவர்களின் பையில்!' என்பதுதான் இன்றைய இந்தியாவின் சமூக நீதி!

● மனோகரன்



படிப்பகம்

# ஈழத

[illegible]ராந்திய ஆதிக்க—ஆக்கிரமிப்பு வெறிபிடித்த பாசிச ராஜீவ் கும்பலும் சிங்கள வெறிபிடித்த பாசிச ஜெயவர்த்தனே கும்பலும் கைகோர்த்துக் கொண்டு அழிவுப் பாதையில் மேலும் மூர்க்கமாக முன்னேறுகின்றன. மேலும் நூற்றுக்கணக்கான ஈழமக்களைக் காவு கொள்வதற்கான நாள் குறிக்கப் போகிறார்கள். அதாவது ஈழமக்களின் விருப்பத்துக்குவிரோதமாக பலாத்காரமாக ஒருமாநிலத் தேர்தலை அவர்கள் மீது திணிக்க முடிவு செய்து விட்டார்கள்.

வரவிருக்கும் இலங்கைஅரசுத் தலைவர் தேர்தல், அடுத்து இலங்கை நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்கள்; அதே போல வரவிருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தல்கள், அடுத்த ஆண்டு இந்திய நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்கள்—இவற்றைக் குறிவைத்து ஈழ மக்கள் மீது பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல். ஒருபோலித்தனமான—ஒரு ரத்தக் கறை படியும் தேர்தலைத் திணிக்கிறார்கள். பாசிஸ்டுகளின் நோக்கங்கள் அம்மணமாகவே தெரிகின்றன.

பாசிஸ்டுகளின் இந்த நோக்கங்களையும், அவர்களது நீண்டகால சதித்திட்டங்களையும் உரிய காலத்தில் துல்லியமாகக் கணித்துச் சொன்னது "புதிய ஜனநாயகம்" ஏடு. "ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும், இலங்கைத் தமிழர்களின் நலன்களை அடகு வைக்கும் துரோகத்தனமான ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கி, ஈழப் போராளிகளைப் பிளவு படுத்தி, அவர்களில் ஒரு பிரிவினருடன் பேரத்தை முடித்துக் கொண்டு ஒரு பொம்மை ஆட்சியை ஈழத்தில் நிறுவுவதுதான் இந்திய—இலங்கை பாசிஸ்டுகளின் உடனடி நோக்கம்." என்று ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே புதிய ஜனநாயகம் எழுதியது.

இந்திய—இலங்கை பாசிஸ்ட்டுகள் தமது சதித்திட்டத்தை நிறைவேற்ற இவ்வளவு காலம்பிடித்தது என்றால் அதற்குமுக்கிய காரணம் புலிகளுடன் அவர்கள் நடத்திய பேரங்கள் வெற்றி பெறவில்லை. புலிகளின் ஏகபோக பிரதிநிதித்துவத்தை இந்திய — இலங்கை பாசிஸ்டுகள் தொடர்ந்து ஏற்க மறுக்கிறார்கள். மற்றொரு காரணம் இன விடுதலை, சுதந்திரம், ஜனநாயகத்துக்கான உறுதியான போரில் ஈழத்தமிழர்கள் அழுத்தி நிற்கிறார்கள். அவற்றுக்காக அளப்பரிய தியாகங்களைப் புரிந்து பாசிச சதிகளைத் தடுத்து முறியடித்து வருகிறார்கள்.

பாசிச சதியின் விளைவுகளையும் பின் வருமாறு புதிய ஜனநாயகம் எழுதியது. "வரலாற்று தப்பட்டுள்ளன. பாசிச ராஜீவ் அடுத்தடுத்து [illegible] பஞ்சாப், அசாம், மிஜோ ஒப்பந்தங்கள் இதோ, நம் கண் முன்னே துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப் படுகின்றன. அங்கே ஒரு இனத்து மக்களே தங்களுக்குள் பாசிஸ்டு படுகொலை செய்து கொள்ளுகிறார்கள். அந்தத் துப்பாக்கிகள் பாசிஸ்டுகளையும் குறிபார்க்கின்றன. அதேபோன்றுதான் இலங்கை தமிழர்களைப் பிளவுபடுத்தி அவர்களுக்கு எதிராக அவர்களே போரிடும் நிலைமையைத் தோற்றுவிப்பதன் மூலம் பாசிஸ்டுகள் தப்பிவிட முடியாது" என்று எழுதியது.

வரலாற்று உண்மைகள் ரத்தத்தால் எழுதப்பட்டு துலக்கமாகத் தெரிந்தாலும் பாசிஸ்டுகள் அவற்றை ஒருபோதும் ஏற்பதில்லை. தமது ஆதிக்க, இன வெறிபிடித்த அழிவுப் பாதையில் தொடர்ந்து நடக்கின்றனர். தமது சதித் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ள அலைகிறார்கள். அதன் ஒரு பகுதியாக ஈழத் தேர்தலை நடத்திவிடுவதற்காக அடுத்தடுத்த காரியங்களில் வேகமாக இறங்கியுள்ளனர்.

லட்சத்துக்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பு இராணுவத்தை ஏவி மூன்று கட்டங்களில் புலிகளைத் தேடி அழிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டது பாசிச ராஜீவ் கும்பல். புலிகளை ஏறக்குறைய ஒடுக்கிவிட்டதாகவும், ஈழத்தில் அமைதி நிலையை உருவாக்கி விட்டதாகவும் தொடர்ந்து பிரச்சாரம் செய்தது. இதையே அறிக்கையாகக் கொடுத்து ஈழத்தில் மாநிலத் தேர்தல்களை நடத்தும்படி பாசிச ஜெயவர்த்தனே கும்பலை நிர்பந்தித்தது. அதே சமயம் தனது இரகசிய உளவுப் படையான "ரா" மூலம் புலிகளுடன் பேரம் நடத்தியது, அது தோற்றுப்போகவே ஈழத்தில் ரத்த ஆறு ஓடினாலும் தேர்தல்களை நடத்திவிடுவது என்று தீர்மானித்தது.

இலங்கை அரசுத் தலைவர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான காலம் நெருக்கவே வேறு வழியின்றி உடனடியாக ஈழத் தேர்தலை நடத்த ஜெவர்த்தனே கும்பலும் ஒப்புக்கொண்டது. அதன் பிறகு தமது சதித் திட்டத்தை இந்திய, இலங்கை பாசிஸ்டுகள் மூர்க்கமாக அமுலாக்கத் தொடங்கினர், ஈழப் போரில் காயமடைந்து, தமிழ் நாட்டில் தஞ்சமடைந்து, சிகிச்சை பெற்று வரும் போராளிகள் 200 பேரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தனர். படுகாயமுற்று மருத்துவமனையில் கிடந்த அந்தப் போராளிகள் கடத்தல், கொலை, கொள்ளை முதலிய அராஜகங்களில் ஈடுபடுபவராக அவதூறுகள் பரப்பியது. அதற்காக தமது இரகசிய உளவாளிகளும், கைக்கூலிகளுமான சில ஈழவர்களை வைத்து "ரா"வே திட்டமிட்டு அராஜக—வன்முறை நடவடிக்கைகளைச் செய்தது. ஈழத்துக்கு மருந்து போன்ற நிவாரணப் பொருட்களை ஏற்றிச் செல்லப் பயன்படும் படகுகளையும், செய்தித்தொடர்புச் சாதனங்களையும் கைப்பற்றி பறிமுதல் செய்தது. கொடிய கிரிமினல் குற்றவாளிகளைப்போல ஈழப் போராளிகளுக்கு விலங்கிட்டு வழக்கு மன்றக் கமிட்டிகளின் முன்னே இழுத்து வருகிறது.

இன்னொரு பக்கம் ஈழத் தமிழர்களின் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக ஏற்று நிறைவேற்றப் படுவதாக பாசிச ஜெயவர்த்தனே மூலம் அறிவிப்புகள் செய்து வருகிறது. ஈழத்தின் வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரே நிர்வாகத்தின்கீழ் அமைக்கும் பிரகடனம் செய்தது. "பூசா" சிறையிலுள்ள 335 அரசியல்கைதிகளை இரண்டு கட்டங்களில் விடுதலை செய்தது. சிங்களத்தோடு தமிழை ஆட்சி மொழி ஆக்கும் சட்டம் கொண்டு வரப் போவதாக அறிவித்தது. ராஜீவ் ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்று ஆயுதங்களோடு ஒப்படைந்து சரணடையும் போராளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குவதாக அறிவித்தது. மாநிலத் தேர்தல்கள் நடந்து மந்திரி சபை அமைந்த பிறகு அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசி சட்டமியற்றுவதாக அறிவித்தது.

கொடிய கிரிமினல் குற்றவாளிக
மன்றக் கமிட்டிகளின் முன்னே இ





www.padippakam.com
படிப்பகம்

# ...நலைகள்:

போராளிகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, சரணடைந்து ஆயுதங்களை ஒப்படைக்கவும், தேர்தலில் பங்கேற்கவும்வசதியாக 5 நாட்களுக்கு விடுதலைப் பட்சமான போர் ஓய்வு செய்வதாக அறிவித்தது. அதே சமயம் வீட்டுக் காவலில் இருந்த 'கிட்டு' உட்பட இன்னும் சில போராளிகளை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைத்து சரணடைவதற்கான நிர்பந்தம் செய்தது. ஈழ மக்கள் கமிட்டிகள் கேட்டுக் கொண்டதாகச் சொல்லி மேலும் 5 நாட்கள் போர் ஓய்வை நீட்டித்தது.

*நிரந்தரமான போர் ஓய்வு;* கிட்டு உட்பட இந்தியாவில் சிறையிலுள்ள போராளிகள் விடுதலை; இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது! அரசாங்கத் தலைவர்களுடன் நேரடியான பேச்சுவார்த்தை; நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை— ஆகியவற்றைக் கோரினர், புலிகள். இவற்றை அடியோடு மறுத்துவிட்ட பாசிச ராஜீவ் கும்பல் மீண்டும் ஆக்கிரமிப்புப் போரைத் துவங்கி தொடர்ந்துநடத்துகிறது. அதே சமயம் ஈழ மாநிலத் தேர்தலுக்கான வேட்பாளர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தேதிகளை அறிவித்துள்ளது இலங்கை தேர்தல் கமிஷன். எப்படியும் தேர்தல்களை நடத்துவது என்கிற முடிவோடு புதிதாக மேலும் கூடுதலான இந்திய இராணுவப் பிரிவுகளைக் கொண்டு போய்க் குவிக்கிறது பாசிச ராஜீவ்.

ப்போராளிகளுக்குவிலங்கிட்டுவழக்கு ு.



... நாட்டி, தேர்தல்கள் நடத்தி அரசியல் வழித் தீர்வு காண விழைவதாக ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல் செய்து வரும் பிரச்சாரங்கள் அத்தனையும் பொய்யானவை; அறிவிப்புகள் அத்தனையும் கபடத்தனமானவை; நடவடிக்கைகள் அத்தனையும் பித்தலாட்டமானவை. ஈழப் பிரச்சினையில் பாசிச ராஜீவ் கும்பலை ஆதரிக்கும் இந்தியப் பத்திரிக்கைளே அதற்கு மாறான செய்திகள் தருகின்றன.

ஈழத்தில் புலிகளை நிராயுதபாணியாக்கும்—தேடி அழிக்கும் பணி ஏறக்குறைய முடிந்துஅமைதி நிலைநாட்டப்பட்டு விட்டதாக பாசிச ராஜீவ் கும்பல் பிரச்சாரம் செய்கிறது. புலிகளுக்கு சமீப காலத்தில் கணிசமான இழப்புகள் ஏற்பட்டிருப்பினும், இந்திய அரசு செய்யும் பிரச்சாரத்துக்கு மாறாக இன்னும் புலிகள் போரிடும் பலம் பெற்றவர்களாகவும், தேர்தல் முயற்சிகளைத் தகர்த்துவிடும் வலிமை—செல்வாக்கு உடையவர்களாக இருக்கிறார்கள் என்று சென்ற மாதம் எல்லா இந்தியப் பத்திரிக்கைகளும் எழுதின. மாதம் 50 லட்சம் ரூபாய் வரை வரி வசூலிக்கும் அளவு புலிகளின் செல்வாக்கு நிலவுவதாகக் கூறுகின்றனர். கடந்த 10 நாள் போர் ஓய்வைப் பயன்படுத்திக்கொண்டு 50 லட்ச ரூபாய் மதிப்புடைய மருந்துகளை வாங்கிப் புலிகள் பதுக்கி வைத்ததாக எழுதுகின்றன.

புலிகளை ஒழிப்பதில் இந்திய இராணுவம் தவறிவிட்டது. நீண்ட காலம் எடுத்துக் கொள்கிறது என்று ஜெயவர்த்தனே கும்பலின் முக்கிய மந்திரிகளான பிரதமர் பிரேமதாசா, லலித் அதுலத் முதலி, திசநாயகே ஆகியோர் கூறுகின்றனர். மேலும் புதிய போராளிகளை உருவாக்கவும் ஆயுதங்களைப் பெறவும் புலிகளால் முடிகிறது என்று இந்திய வெளிநாட்டுப் பத்திரிக்கைள் எழுதுகின்றன.

**தேர்தல் நடப்பதைப் பெரும்பான்மையான ஈழத் தமிழர்கள் வரவேற்பதாக இந்திய—இலங்கை** பாசிஸ்டுகள் செய்வதும் ஒரு பொய்ப் பிரச்சாரமே. புலிகள் பங்கேற்காவிட்டால் தேர்தல் வெறும் கேலிக் கூத்தாக போலியானதாக இருக்கும். கிழக்கில் 30 சதவிகிதத்தினரும் வடக்கில் 5 சதவிகிதத்தினருமே தேர்தலை ஆதரிக்கின்றனர். அப்படியே நடந்தாலும் தேர்தல் களம் ரணகளமாகி ரத்த ஆறு ஓடும் என்று அந்தப் பத்திரிக்கைகள் கணிக்கின்றன.

''பூசா'' சிறையிலிருந்து 335 அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை என்ற அறிவிப்பும் மோசடியே. அவர்களில் பெரும்பாலான

...வர்கள் அரசியல் காரணங்களுக்க பிடிக்கப்பட்டவர்கள் அல்ல. அப்பாவித் தமிழர்கள். எஞ்சியவர்களோ ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட துரோக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள். வடக்குகிழக்கு இணைப்பு என்பதும் அதிகாரமே இல்லாத மாநில அரசு அமைத்துவிட்டு பிறகு அதிகாரப் பகிர்வு பற்றி சட்டம் வரும் என்பதும் தொடர்ந்து சிங்கள இன அடக்கு முறை நிர்வாகத்தின் கீழ் ஈழம் நீடிப்பதையே குறிக்கிறது.

முழுமையான, சுதந்திரமான தேர்தல் என்பதும் மோசடியே ஈழத்திலிருந்து லட்சக்கணக்கானோர் வெளியேறி இன்னமும் அகதிகளாக உள்ளனர். கட்டாய சிங்களக் குடியேற்றம் நீடிக்கிறது. ஆக்கிரமிப்புப் போரும் தொடர்கிறது. எனவே தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்று ராஜீவ் ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்கும் துரோக அமைப்புகளில் பத்மநாபனின் தலைமையிலான ஈ.பி. ஆர்எல்எப் தவிர அனைத்துமேகூறுகின்றன. புலிகள் மட்டுமல்ல இந்த துரோக அமைப்புகளிலும்கூட சில தேர்தல்களில் பங்கேற்க முடியாத—மறுக்கும் நிலை உள்ளது.

**யதார்த்த நிலைமைகள்என்னதான் இருந்தாலும் தேர்தலைக் கூட பாசிச முறையில் நடத்தி** பொம்மை அரசுகளை நிறுவுவதற்கு பாசிஸ்டுகள் தயங்குவதில்லை. பாகிஸ்தான், வங்க தேசத் தேர்தல்களில் பார்க்கிறோம். இதே பாசிச ராஜீவின் தாய் இந்திரா 1982இல் அசாமில் ஆயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்து 2, 3 சதவிகித மக்களே வாக்களித்த போலியான தேர்தலை நடத்தவில்லையா? அதே பாதையில் ராஜீவ் ஜெயவர்த்தனே கும்பல் மூர்க்கமாக நடை போடுகிறது.

இந்நிலையில் தொடர்ந்து இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிடும் புலிகள், ஈழ மக்களின் இன விடுதலை தரும் சுதந்திரத்துக்குமான போராட்டத்தில் ஈழப் புரட்சிகர, முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகளுடன் ஐக்கியபட வேண்டும். சாத்தியமான எல்லா நேச சக்திகளும் ஐக்கியப் படாமல் பலம் வாய்ந்த இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை முறியடிக்கமுடியாது. இலங்கைமண்ணிலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தைவிரட்டுவதற்கான போரில் சிங்கள-தேசிய சக்திகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் சொந்த நாட்டு மக்கள் பிளவுபட்டு போரிட்டுக் கொள்வது எதிரிக்குத் தான் சாதகமாக அமையும். காலத்தின் கட்டாயம் போராளிகளுக்குச் சொல்லும் கட்டளை இதுவே.

● **மாணிக்கவாசகம்**



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஒளியத் தெரியாதவன் சுரைக்குடுக்கைக்குள் நுழைந்தானாம்!

ரைட், லெப்ட் இரு கம்யூனிஸ்டு கட்சிகள்சேர்ந்து நிலச் சீர்திருத்த சட்டத்தைஅமுல் படுத்தக் கோரி நடக்கவிருக்கும், மறியலுக்காக கொள்ளை விளக்க பிரச்சாரம், மதுரை டவுன், சொ. நகர், சம்மட்டிபுரம், அரசரடி போன்ற பகுதிகளில் நடத்தினார்கள்.

பிரச்சாரத்தின்போது, வெண்மணி நிகழ்ச்சியைப் பற்றியும், அன்றைக்கு ஆண்ட அண்ணாவின் ஆட்சியும், பின்னால் வந்த இளவல் கருணாநிதி ஆட்சியும், வெண்மணி நிகழ்ச்சியில்பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி வழங்க வில்லை என்று பேசியிருக்கின்றனர்.

இதை அறிந்த இனமான உடன்பிறப்பான தம்பிகள், கம்யூனிஸ்டுகாரன் இப்படி பேசிவிட்டான்ய்யா? இவர்களை எங்கே தட்டினால் இவர்கள் விழிபிதுங்குவார்கள் என யோசித்தனர். அவர்களுக்கு அறிமுகமான பு.ஜ வாசகர்களிடம் சென்றனர். அவரிடமுள்ள பு.ஜ.வை எடுத்து அதில் போலிகளின் மே.வங்க ஆட்சியின் ஊழலை அம்பலப்படுத்தி வெளிவந்த கட்டுரையை அப்படியே தங்களுடைய செய்தி கரும்பலகையில் எழுதி, நன்றி: புதிய ஜனநாயகம் என்றும் முடித்தனர். எங்க தலைவரை பற்றி எழுதினில்ல, இப்ப பதில் சொல்லு என்று சவால் விட்டனர்.

பல்லுப் போன கிழவனுக்கு சொல்லு போன கதையாக மே. வங்க அரசின் ஊழலுக்கு சரியான பதிலை தர வக்கில்லாத கிழடுதட்டிப்போன லெப்ட் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய கரும்பலகையில் இப்படி அலித்தனமாக எழுதியிருந்தனர்.

''கண்ட கண்ட சாக்கடை பத்திரிக்கைக்கெல்லாம் நாங்கள் பதில் சொல்ல முடியாது. சூரியனைப் பார்த்து நாய் குரைத்தது போலத்தான் இது. உங்களுடைய முரசொலியில் பதில் எழுததயாரா? உங்கள் தலைவர் மேடையில் பேசத் தயாரா?''

மறுநாள் உடன்பிறப்புகள் எழுதினார்கள்: ''வெண்மணியை பற்றி பேசவோ, எழுதவோ அவசியமில்லை. முதலில், புதிய ஜனநாயகத்தில் வெளிவந்த மே.வங்க ஆட்சியின் ஊழல் பொய்யா? பொய் என்றால் இதோ, அருகிலிருக்கும் உங்கள் கட்சி ஆபீஸிற்கு (தீக்கதிர் அலுவலகம்) போய் புகார் செய்து புதிய ஜனநாயகத்தின்மீது வழக்கு தொடுக்க முடியுமா? புதிய ஜனநாயகம் எங்கள ஆதரவு பத்திரிக்கை அல்ல!

சொ.நகர் கம்யூனிஸ்ட் நண்பர்களே! சிந்திப்பீர்!'' எனமுடித்திருந்தனர். இனமான தம்பிகள்எதை சிந்திக்க் சொன்னார்களோ! அவர்களுக்கே வெளிச்சம்!

பார்த்தார்கள், புரட்சியை மொத்த குத்தகைக்கு எடுத்த போலிகள். நேராக தீக்கதிர் அலுவலகத்திற்கு சென்றார்கள். ''போன மச்சான் திரும்பிவந்தான் பூ மணத்தோட'' என்பது மாதிரி திரும்பி வந்தார்கள். கரும்பலகையில் எழுதியதை சுத்தமாக துடைத்துவிட்டு ''இந்தியாவில் சி.ஐ.ஏ. ஊடுருவல்'' என்று தலைப்பிட்டு உப்பு சப்பான சிலதுகளை எழுதிவிட்டு இனமான தம்பிகளுடன் ''நமக்குள்ள எதற்கு, வீண்விவாதங்கள், சச்சரவுகள்?'' என்று பேசி சமரசமானார்கள்.

செய்தி அறிந்த நாம் உடன்பிறப்புகளை சந்தித்து அவர்கள் உங்கள் ஆட்சியைப் பற்றி, தலைவர்களைப் பற்றி பேசினால் நீங்களும் தெரு நிகழ்ச்சி நடத்தி பதில் தர வேண்டியதுதானே! அதுதான் முறை என்று கேட்டபோது, ''திமுகவும், இ.கம்யூனிஸ்டும் கூட்டணி கட்சிகள். அதனாலே... ஹி...ஹி... நீங்களே அதை செய்யுங்க!'' என்றனர் உடன்பிறப்புகள். கடைசியில் கரும்பலகை போர் 'டிரா'வில் முடிந்தது.

தகவல்
புதிய ஜனநாயகம் முகவர், மதுரை.

# நாய் குரைத்தது! லாரி பின்வாங்கியது!

கடந்த 30.8.88 தேதியன்று பரமக்குடி நேதாஜி சாலை ஆர்ச் அருகில், லாரி(MOT 9607)ஒன்று இரவு 10.30 மணிக்கு சிமெண்ட் லோடு ஏற்றிக் கொண்டிருந்தது. அந்த வழியாக வலம் வந்து கொண்டிருந்த பரமக்குடி போலீசு நிலைய எஸ்.ஐ. கணேசன்மற்றும் 6, 7 போலீசுக் காரர்கள் முழு போதையில் இருந்தனர்.

தள்ளாடியபடியே இறங்கிய அக்கும்பல், லோடு ஏற்றிக் கொண்டிருந்த ஊழியர்களை சொல்லக் கூசும் வார்த்தைகளால் ஏசியது. வழக்கமான போலீசின் பல்லவி என்ற ரீதியில் ஊழியர்கள் தயவாக பதில் கூறிக் கொண்டே வேலையில் ஈடுபட்டனர். அதை பொறுக்க முடியாத எஸ்.ஐ கணேசனும் அவனது போலீசும் டிரைவரையும் கிளீனரையும் இழுத்துப்போட்டு நடு ரோட்டில் சகட்டு மேனிக்கு அடித்து உதைத்தது. தடுக்கப் போன லாரி உரிமையாளரை ''நீ யாரடா'' என்று கேட்டு மூன்று பேரையும் வேனில் தூக்கிப் போட்டுக் கொண்டு போலீசு நிலையம் பறந்தது.

அந்த நள்ளிரவு நேரத்தில் நியாயம் கேட்கத் திரண்ட அம்பதுக்கும் மேற்பட்ட சக லாரி உரிமையாளர்கள், தொழிலாளர்களையும் அதிகார மமதையோடு விரட்டியிருக்கிறது போலீசு. ''ஒன்று திரண்டு வந்தால் விட்டு விடுவேன் என்ற நினைப்பா?... மரியாதையாக போய் விடுங்கள் இல்லையேல் காலையில் லாரி ஓட்ட கை கால் இல்லாமல் ஒடித்து விடுவேன்... ஓடுங்கடா'' என விரட்டியிருக்கிறான் எஸ் ஐ. கணேசன்.

கொதிப்படைந்த லாரி உரிமையாளர்களும், தொழிலாளர்களும் மறுநாள் காலை வேலை நிறுத்தத்தில் இறங்கினர். அறுபது லாரிகளுடன் ஊர்வலமாகச் சென்று போலீசு நிலையம் முன்பு நிறுத்தினர். உதவி ஆட்சியாளர், டிஎஸ்பி ஆகியோரிடம் மனுக் கொடுத்தனர்.

போராட்டத்தின் உறுதியைக் கண்டு இறங்கி வந்த மாவட்ட எஸ்பி, பேச்சு வார்த்தை என்ற பெயரில் நூறுக்கும் மேற்பட்ட துப்பாக்கி ஏந்திய போலீசாருடன் கூட்டத்தை துவக்கினார். எஸ்.பியின் மறைமுகமிரட்டலைக் கண்டு உறுதியிழந்த லாரி உரிமையாளர்கள் 'பிடித்துச் சென்ற மூவரையும் விடுவித்தாலே போதும்' என சமரசம் பேசி போராட்டத்தை வாபஸ் பெற்றனர். போலீசு கும்பல் இனி அவர்கள்மீது கருணை காட்டாது. மாறாக அவர்களது பலவீனத்தையும் தேவையற்ற அச்சத்தையும் மூலதனமாக்கி இன்னும் மூர்க்கமாக பாயவே செய்யும். தொழிலாளர்களுடன் ஜனநாயக பூர்வமாக ஒன்றிணைந்து சமரசமற்ற எதிர்த் தாக்குதல் தொடுக்கும் போது மட்டுமே போலீசு கும்பலின் அக்கிரமத்திற்கு முடிவு கட்ட முடியும்.

தகவல் :
—சுப்பு, பரமக்குடி.



படிப்பகம்

www.padippakam.com




# வள்ளியூர் வாகைக்குளம் புள்ளம்பாடி

அதிகார வர்க்கம், போலீசுக் காரன்கள் ஆணவத்திற்கும் அக்கிர மத்திற்கும் இன்னுமொரு சாட்சி திருச்சி, புள்ளம்பாடி துப்பாக்கிச் சூடு.

காவிரி நீரில் தமிழகத்துக் கான உரிமையை நிலைநாட்ட வக்கற்ற ஓட்டுப் பொறுக்கிகள், **மேட்டூர் அணையின் பாசனப்** பகுதியை ஆண்டுதோறும் குறைக் க மட்டும் தவறுவதில்லை.

மேட்டூர் அணையில் 94 அடி உயரம் நீர் மட்டம் ஏறும்போது தான் புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்படும் என்பதை அரசின் சட்ட விதியாக்கி அப்பகுதி மக்களின் பாரம்பரிய பாசன வசதி உரிமையை சட்ட பூர்வமாகவே மறுத்து வருகின்ற னர். ஒவ்வொருமுறையும் ஆட்சியி லிருக்கும் ஓட்டுப் பொறுக்கிகள், அப்பகுதி மக்களிடம் ஓட்டுப் பொறுக்கும்போது மட்டும் சட்ட விதியைக் கண்டுகொள்ளாமல் அவ்வப்போது சிறிதளவு தண் ணீரை திறந்து விட்டு பரோபகாரி யாக நாடகமாடுவது உண்டு.

வறட்சிக்குப் பிறகு இப்போது நீர் மட்டம் 94 அடி உயர்ந்த பிறகு தான், புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் விடக் கோரி மனுமேல் மனுக் கொடுத்தனர் அப்பகுதி விவசாயிகள். எதற்கும் பதில் வராமல் போகவே, கடைசியாக முற் றுகைப் போராட்டம் ஆரம்பித் தனர்.

புள்ளம்பாடி, வெங்கடாசல புரம், கோண்டாக்குறிச்சி, ஆலம் பாக்கம், ஆலம்படி என பதினைந் துக்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள், 8-9-88 அன்று புள்ளம்பாடி பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்துக்கு ஊர் வலமாகச் சென்றனர். 2000க்கும் மேற்பட்ட விவசாயப் பெண்கள் போராட்டத்தின் முன்னணியாக வந்து கொண்டிருப்பதைக் கண்ட போலீசு மிருகங்கள் சொல்லக் கூசும் வார்த்தைகளால் கேலியும் கிண்டலும் செய்திருக்கின்றன. தட்டிக் கேட்டவர்களை "வாடி... போடி" என ஏக வசனத்தில் நக்கல் செய்திருக்கின்றனர்.

பஞ்சாயத்து யூனியன் அலு வலகத்தை வந்தடைந்த பெண் விவசாய திரளினரைக் கட்டுப்படுத் துவதாகக் கூறி அரக்கத்தனமாக தாக்கியிருக்கின்றன போலீசு மிரு கங்கள். பின்னால் வந்து கோண் டிருந்த ஆண் விவசாய திரளினர் போலீசின் செய்கையைக் கேட்டு கொதிப்படைந்து தன்னெழுச்சி யாக சாலை மறியலிலும் கல்லெறி யிலும் ஈடுபட்டிருக்கின்றனர். இதில் டி. எஸ். பி முருகேசன் என்ற போலீசு அதிகாரிக்கு பல மாக கல்லடி பட்டிருக்கிறது. உட னே போலீசுக் கும்பல் நெருப்பை தொட்ட குரங்கு கணக்கில் ஆட் டம் போட ஆரம்பித்தது.

கல்லடிபட்ட டி. எஸ். பி முரு கேசன் சம்பவம் நடந்த இடத்தை விட்டு விட்டு அங்கிருந்து 400 மீட்டர் தூரத்திலிருந்த யூனியன் அலுவலகத்திற்குச் சென்று, போலீ சுக்காரனிடமிருந்து துப்பாக்கியை வாங்கி அங்கிருந்த கூட்டத்தின் மீது கண்மூடித்தனமாக சுட்டு இருக்கிறான். இதில் ஜெர்மையா, நாகராஜன் என்ற அப்பாவிகள் அதே இடத்தில் பிணமானார்கள். குமாரவேல் என்பவர் குற்றுயிராக வீசப்பட்டார். 200க்கும் மேற் பட்டவர்கள் துப்பாக்கிச் சூட்டால் காயம்பட்டும், கூட்ட நெரிசலில் மிதிபட்டும் ரத்தக் காயங்களுடன் உயிர் தப்பினார்கள்.

கையில் சிக்கிய பெண்களை மானபங்கப்படுத்தி, சேலையை உருவி அடித்து உதைத்து விரட்டி யிருக்கிறது போலீசு கும்பல். அரு கில் இருக்கும் ஏரியில் கை கால் முகம் கழுவிக் கொண்டிருந்தவர் களையும், வீட்டில் குழந்தையை தொட்டிலில் ஆட்டிக் கொண் டிருந்தவர்களையும் கூட விடாமல் அரக்கத்தனமாக தாக்கியிருக்கின் றன போலீசு மிருகங்கள். துப்பாக் கிச் சூட்டில் பலியானவர்களிடம் அவர்களது உறவினர்களைக் கூட அண்ட விடாமல் அடித்து விரட்டி யிருக்கின்றனர்.

கடைசியில் வழக்கம் போல, அதிகார வர்க்கம், போலீசுக் கும் பல், ஓட்டுப் பொறுக்கிகள் சேர்ந் துகொண்டு மக்களுக்கு ஆறுதல் கூறும் படலத்தை ஆரம்பித்தனர். சமாதானக் கமிட்டி, நீதி விசா ரணை, உதவித் தொகை நாடகங் கள் நடந்தேறின. அப்பகுதி மக் களின் வாழ்வுக்கான போராட்டத் தில் இவ்வளவு நாளும் முகம் கொடுக்காமல், அதற்கு எதிராக செயல்பட்டு வந்த அப்பகுதி எம். பி. அடைக்கலராஜ் இப்போது மக்களுக்கு ஆறுதல் கூற அடிக் கடி வளைய வருகிறார்.

ஏழையின் சிரிப்பில் இறைவ னைக் காண வந்த அண்ணா துரை ஆட்சியில் தொடர்ந்த கீழ் வெண்மணிக் கொடுமை, கருணா நிதி ஆட்சியில் திருச்சி வீதிகளில் ரத்த ஆறாய் பெருக்கெடுத்தது. விவசாய கூலிகளின் ஏழ்மையைக் கண்டு, சினிமாவில், மேடையில் கண்ணீர் விட்ட எம்ஜிஆரின் ஆட்சியில் போராடிய வள்ளியூர், வாகைக்குளம் கூலி விவசாயி களுக்கு துப்பாக்கி தோட்டாக்கள் தான் பரிசாக கிடைத்தது. காங் கிரசு எடுபிடி கவர்னர் அலெக் சாண்டர் ஆட்சியிலும் துப்பாக்கி யும் தோட்டாக்களும்தான் பிரச் சினையைத் தீர்க்க முன்வருகிறது.

விவசாய பெருமக்கள் இனியும் வாளாய் இருப்பதில் பயனேதுமில் லை. அமைப்பாக திரண்டு ஆயுதம் தாங்கிப் போராடினாலொழிய இதற்கு முடிவில்லை. இதற்கு சம ரசமற்ற புதிய போராட்டத் தலை மையை தேர்ந்தெடுப்பதும் அதை நோக்கி அணி திரளுவதும் அவ சர அவசியமாகும்!

**'புதிய ஜனநாயகம்' வாசகர்கள்**
**புள்ளம்பாடி வட்டாரம்.**

காங்கிரசு எடுபிடி கவர்னர் ஆட்சியில் புள்ளம்பாடி விவசாயி கள் மீதான துப்பாக்கிச் சூட்டை எதிர்த்து புதிய ஜனநாயகம் வாச கர் வட்டம், புள்ளம்பாடி ஒன்றி யம் சார்பில், சுற்றியுள்ள கிராமப் புறங்களில் கையெழுத்து போஸ் டர் ஒட்டப்பட்டது. "போலீசு அராஜகம் ஒழிக!" இருவரை கொலை புரிந்து பலரைப் படு காயப்படுத்திய போலீசு வெறி நாய்கள் ஒழிக!", "விவசாயிகள் போராட்டம் வெல்க!" என முழக் கங்கள் வடிக்கப்பட்டன. இச்சுவ ரொட்டிகள் மக்களுக்கு அவர் களின் நண்பர்களையும் எதிரி களையும் சரியான முறையில் அடையாளம் காட்டின.

படிப்பகம்

www.padippakam.com

# ஸ்விஸ் வங்கியில் தங்கம்

# சியோலில் தகரம்

தங்கத்தை ஒலிம்பிக்கில் வாங்கித்தான் உலக சாதனை படைக்க வேண்டுமா என்ன? சுவிஸ் வங்கியில்தான அது தாமரையாக மலர்ந்து உலகம் முழுவதும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறதே! அது போதும் என அடக்கமாக இந்தியா வெறுங்கையுடன் நாடு திரும்பி உலகமே வியக்குமளவு புது சாதனை படைத்து விட்டது.

3.5 லட்சம் மக்கள் தொகைக் கொண்ட மத்திய அமெரிக்காவின் குட்டி நாடான சுரினாம்கூட ஒலிம்பிக் விளையாட்டில் சாதனை படைத்து ஒரு தங்கப் பதக்கத்தை வென்றிருக்கிறது. இந்தியாவின் ஒரு மாநிலத்தின் பரப்பளவுக்கோ, மக்கள் தொகைக்கோ இணையில்லாத குட்டி குட்டி நாடுகள் கூட ஒலிம்பிக்கில் வெற்றிபெற்றே தீர வேண்டும் என்று பொங்கி வழியும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு மிகக் கடுமையான போட்டிக்கு நடுவேபதக்கங்களை வென்றுவெற்றிக்களிப்புடன் நாடு திரும்பியிருக்கின்றன.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், குறிப்பாக அதெலடிக் எனப்படும் தட கள விளையாட்டுப் போட்டிகளில் இது வரை ஜாம்பவானாக இருந்த அமெரிக்காவை, கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சின்னஞ்சிறு நாடுகளான ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா; மத்திய தரைக்கடல் நாடான துருக்கி மத்திய அமெரிக்க நாடுகளான கோஸ்டரிக்கா, பெரு முதலிய நாடுகள், அதிர்ச்சி தரக்கூடிய அளவில் அமெரிக்காவை பின்னுக்கு தள்ளியுள்ளன. அது மட்டுமல்ல, பிரமிக்கதக்க அளவில் ஒலிம்பிக் சாதனை, உலக சாதனை நிகழ்த்தி வெற்றி பெற்றுள்ளன. இங்கிலாந்தையும் இந்நாடுகள் விட்டு வைக்கவில்லை. இந்நாடுகளின் பலமான போட்டியால் பதக்க பட்டியலில் 11வது இடத்தைதான் இங்கிலாந்தால் பிடிக்க முடிந்தது.

ஐயகோ! இந்தியாவின் நிலையோ மிகவும் பரிதாபகரமானது. தங்கமும் வேண்டாம், தகரமும் வேண்டாம். விட்டால் போதும் என்று ஓடி வரும் அளவுக்கு பங்கெடுத்துக் கொண்ட போட்டிகள் அனைத்திலும் மண்ணைக் கவ்வியது.

காரணம், 'கலந்துக் கொண்ட விளையாட்டு வீரர்களின் அக்கறையின்மையோ, அலட்சிய போக்கோ அல்ல, மாறாக அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பயிற்சியின் தரமும், செலுத்தப்பட்ட கவனிப்பும் மிகவும் மோசமானது என்பதாலேயே இந்த நிலைமை!' என்றோ, அல்லது இதற்கு எதிர்மறையாகவோ அணுகிதோல்விக்கான காரணத்தை முழுமையாக கண்டுவிட முடியாது.

விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கும் முறையிலிருந்து பயிற்சியளிக்கப்பட்டு போட்டிக்கு அனுப்பப்படும் வரை ஊழலும் அதிகார முறைகேடுகளும், 'அரசியல் அந்தஸ்து', தலையீடுகளும் நிர்பந்தங்களும் பின்னிப் பிணைந்துள்ளது. அரசாங்கம் ஒருவரை விளையாட்டு வீரராக அங்கீகரிப்பதற்கு அவர் விளையாட்டு வீரராக இருந்தால் மட்டும் போதாது. மேற்கூறிய பின்னணியிலிருந்து வந்தவராகவும், அதனுள் நுழைந்து முன்னேறும் திறமை படைத்தவராகவும் இருக்க வேண்டும்.

தேசிய அளவில்அங்கீகரிக்கப் பட்டிருக்கும் இந்தியவிளையாட்டு வீரர்களில் பெரும்பாலோர், தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்கள், மிகப்பெரும் வர்த்தக சூதாடிகள் குடும்பங்களில் பிறந்த செல்லப் பிள்ளைகள்.

விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில வீரர்கள், நடுத்தர வர்க்கத்தின் மேல்மட்ட குடும்பங்களிலிருந்து வந்தவர்கள்.

மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் விளையாட்டு வீரர்களிலும் பெரும்பாலோர் மேற்கூறிய குடும்பங்களிலிருந்து வந்தவர்கள்தான். இதில் ஒரு சிலர் மட்டுமே நடுத்தர வர்க்கத்தின் அடிதட்டுகளிலிருந்து வந்தவர்களாக இருக்கிறார்கள்.

எப்படியிருந்தாலும் தேசிய, மாநில அளவில் உள்ள விளையாட்டு வீரர்களில் அதிகமானோர் கல்லூரி மற்றும் உயர்கல்வி படித்தவர்கள் என்பது யாவருக்கும் தெரிந்த உண்மை. கல்லூரி மற்றும் பல்கலைக் கழக போட்டிகளில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களிலிருந்துதான் அதிகமாக மாநில அளவிலும் தேசிய அளவிலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஆக, கையளவே ஆன தரகு அதிகார வர்க்க, நிலப்பிரபுத்துவ மற்றும் மேட்டுக்குடி வர்க்கங்களான நாட்டின் ஜனத்தொகையில் பத்து சதவீதத்திற்கும் குறைவாக உள்ள உயர்கல்வி படித்த கும்பலிலிருந்துதான் இந்திய நாட்டின் விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகப் பெரும்பான்மையாக உள்ளவிவசாயிகள், தொழிலாளர்கள், படிப்பறிவு இல்லாத ஏழைகளான 90 சதவீத உழைக்கும் மக்களுக்கும் விளையாட்டும் எந்த சம்பந்தமுமில்லாமல் பிரிக்கப்படுகிறார்கள்.

இப்படி, தேர்ந்தெடுக்கப்படும் சம்பந்தப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு அவ்விளையாட்டைப் பற்றியான அடிப்படை அறிவு, ஆற்றல் என்பது இயற்கையான, இயல்பான ஒன்றாக இல்லை. மாறாக, பொருத்தமற்ற வகையில் திணிக்கப்பட்ட பெரும் சுமையாக இருக்கிறது.

உதாரணத்திற்கு, மீனவக் குடும்பங்களிலிருந்து வந்த சிறுவர்களுக்கு சரியான பயிற்சிக் கொடுப்பது மூலம் துடுப்பு படகு விளையாட்டில் வெல்லற்கரிய வீரர்களாக உருவாக்க முடியும். எழுத்தராக பணிபுரியும் ஒருவரை அதற்கு தேர்ந்தெடுத்தால் என்னதான் அவருக்கு விருப்பம்இருந்தாலும் மீனவருடைய அதிகபட்ச திறமையை அவரிடமிருந்து கொண்டு வர முடியாது. வில், அம்பு எறிதல் துப்பாக்கி சுடுதல் போட்டிகளுக்கு வேட்டையாடுவதையே தொழிலாக கொண்ட பழங்குடிகளின் குழந்தைகளைக் கொண்டு மிகச்சிறந்த வீரர்களை உருவாக்க முடியும். கழைக் கூத்தாடும் கலைஞர்களின் குழந்தைகளுக்குத் தேவையான பயிற்சி கொடுத்தால் நம் நாடு உலகின் தலைசிறந்த 'ஜிம்னாஸ் டிக்' வீரர்களை ஏராளமாக கொண்டாத இருக்கும்.

ஆனால் ஒட்டுண்ணி அதிகாரவர்க்க ஆட்சியதிகார கும்பல் கையிலிருக்கும் வெண்ணெய்யை



படிப்பகம்

www.padippakam.com



சொந்த நாட்டு மக்களை சுடுகாட்டில் தள்ளிவிட்டு, ஒலிம்பிக் உல்லாசம் காணும் தென்கொரிய சர்வாதிகார அரசுக்கு எதிராக வீதிகளில் மாணவர்கள் வீரப்போர்.

குப்பையில் வீசிவிட்டு கேழ்வரகில் நெய்வடிக்கப் போவதாக மக்களின் வரிப்பணத்தை மலையென விழுங்குகிறது.

விளையாட்டை ஊக்குவிப்பதற்காக, மத்திய அரசிலிருந்து மாவட்டங்கள் வரை பல இலாக்காக்கள். இவற்றை வழி நடத்த தனி மந்திரிமார்கள். இவற்றுக்கு ஆகும் செலவு பல கோடி ரூபாய்கள். அவ்வப்போது இக்கும்பலின் வெளிநாட்டு பயணம். இவற்றின் கீழ் அடுக்கடுக்காக, விளையாட்டின் ஒவ்வொரு பிரிவுக்கும் சம்மேளனங்கள். ஒவ்வொரு சம்மேளனத்திற்கும் தலைவராக இவர்களின் எடுபிடிகள். இன்னும் தேசீய அளவில் காத்தாடிவிடும் 'வீர' விளையாட்டின் சம்மேளனம் மட்டும்தான் ஆரம்பிக்கவில்லை.

மறுபுறம் நாட்டில் இருக்கும் 90 சதவீதம் ஆரம்பப் பள்ளிகளில் விளையாட்டுத் திடலே இல்லை.

இது அரசே தரும் புள்ளி விபரம். கல்லூரிகளிலும் பல்கலை கழகங்களிலும்கூட விளையாட்டு பயிற்சிப் பொருட்கள், கருவிகள் முறையாக இல்லை. இந்த லட்சணத்தில், இளைஞர்கள் விளையாட்டில் உற்சாகம் காட்டுவதில்லை என்று முதலைக் கண்ணீர் வேறு. சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் கூட காலாவதியாகிப் போன கருவிகளைக் கொண்டே பயிற்சி பெற வேண்டிய அவலம். பயிற்சிக் காலங்களில் அவர்களுக்கு முறையான ஊட்டச்சத்து உணவுகள் கூட போதிய அளவில் வழங்குவதில்லை. பயிற்சியின்போது சுகவீனமடைந்தாலோ, அங்கங்களில் பழுது ஏற்பட்டாலோ அதிநவீன சிகிச்சைகள் கிடையாது. ஆசிய வீராங்கணையாக புகழப்படும் பி டி. உஷாவுக்கும் இதே நிலைதான். எட்டு மாதத்திற்கு முன் அவர் கணுக்கால் பிசகு ஏற்பட்டது. இன்று வரை போதிய அக்கறையுடன் அவர் கவனிக்கப்படவில்லை. வலியுடனே ஒலிம்பிக்கில் ஓடி தோற்றார்.

இதுவரைசர்வதேச ஒலிம்பிக்கில் விளையாட்டாகவே அங்கீகரிக்கப்படாத கிரிக்கெட் ஆட்டத்திற்கும், அதன் ஆட்டக்காரர்களுக்கும் ஏகப்பட்ட சலுகைகள், சன்மானங்களை வாரியிறைத்து மகிழ்கிறது ஆளும் ஆட்சியதிகார கும்பல். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எஜமானன் உருவாக்கிய விளையாட்டின்மீது அவ்வளவு காதல்.

பஞ்சம், பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, இதர எண்ணற்ற வேதனைகளை மக்களின்மீது ஏற்றிவிட்டு களிவெறியாட்டம் போடும் பாசிச ராஜீவ் கும்பலை அதன் எஜமானர்களை வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கியெறியும் போராட்டத்தில் நாம் எல்லோரும் கலந்து கொண்டு வெற்றி பெற்று சாதனை படைப்பதுதான் இன்று நம்முன்னுள்ள முக்கிய வேலை!

● பச்சையப்பன்

## கும்பி கூழுக்கு அழுகுது! கொண்டைக்கு பூ கேக்குதா?

ஏறக்குறைய 40,000 கோடி ரூபாய்களை கொட்டி ஒலிம்பிக் விளையாட்டை நடத்தியது தென்கொரிய அரசு. மிகவும் வறிய பின்தங்கிய உலக நாடுகளில் தென்கொரியாவும் ஒன்று. ஏறக்குறை ஏழரை ஆண்டுகள் பத்தாயிரக் கணக்கான கொரிய மக்கள் பஞ்சத்திற்கும் பட்டினிக்கும் இடையில் தங்கள் உதிரத்தைக் கொட்டி உருவாக்கியது தான் சியோல்—ஒலிம்பிக். திரும்பும் பக்கமெல்லாம் வானளாவிய ஸ்டேடியங்கள், கண்ணைப் பறிக்கும் கட்டிடங்கள், சாலைகள் இன்னபிற வசதிகள். பல மாதங்களாக ஒலிம்பிக்கிராமத்தில்இரவு என்பதே வரவில்லை. 24 மணி நேரமும் வண்ணக்கோலம்.

உலகமே வியக்கும் ஒலிம்பிக் கிராமத்தின் சில மைல் தூரத்தில் 7.5 லட்சம் கொரிய மக்கள் வானமே கூரையாக வாழ்கிறார்கள். அவர்களுடைய குடிசைகள் இருந்த இடத்தில்தான் இன்றைக்கு ஒலிம்பிக் கிராமம் எழுந்து நிற்கிறது. ஒலிம்பிக் கிராமத்திற்காக அவர்களுடைய குடிசைகளையும், வீடுகளையும் இடித்து தரைமட்டமாக்கியது கொரிய சர்வாதிகார அரசு. தரைமட்டமாக்கப்பட்ட தங்கள் வீடுகளின்மேல் அவர்கள் குடும்பம் குடும்பமாக உட்கார்ந்து கொண்டு 'எங்கள் மண்ணைவிட்டுப் போகமாட்டோம்' என்று போராடிப் பார்த்தார்கள்; முடியவில்லை. கொரிய போலீசும், அரசால் அமர்த்தப்பட்ட குண்டர்களும் அவர்களை அடித்தே விரட்டினார்கள். நிலத்தை இழந்ததற்கான நிவாரணம்கூட இதுவரை அவர்களுக்கு கிடைக்கவில்லை.

ஆசியாவின் மிகப்பெரும் குடிசைப் பகுதியான பம்பாய் தராவி போன்றுவாழ்நிலை—நகர அமைப்புக் கொண்டது சியோல். பஞ்சம் பிடித்தநகரம், குறுகலான தெருக்கள்! முட்டு சந்துகள். தீப்பெட்டி மாதிரி வாழும் மக்கள் ஒலிம்பிக் பாதுகாப்பு கெடுபிடிகளால் வேட்டையாடப்பட்டு சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

சொந்த நாட்டை சுடுகாடாக்கிவிட்டு ஒலிம்பிக் உல்லாசம் நடத்தும் சர்வாதிகார கொரிய அரசின் குரூரங்களை எதிர்த்து வீரப்போர் புரிகிறார்கள் புரட்சிகர மாணவர்கள், இளைஞர்கள் ஜனநாயக சக்திகள். கொடிய அடக்குமுறை அக்கிரமங்களை எதிர்த்து இன்னும்கூட தெருக்களில் நேருக்கு நேர் மோதுகிறார்கள். சர்வாதிகார அரசை சவக்குழிக்கு அனுப்பாமல் நாங்கள் ஓயப் போவதில்லை என சூளுரைக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# குடமுருட்டி குண்டு

## போலீசின் சதி தோற்றது

ஜனவரி 86—ல் ராஜீவ் காந்தி திருவையாறு (உல்லாச) கலாச்சார மையத் திறப்பு விழாவிற்கு வந்திருந்தார். அவர் வருவதற்குச் சில நாள் முன்பே அவர் போகிற வழியில்குடமுருட்டி ஆற்றுப் பாலத்தில் சில நபர்கள் குண்டு வைத்து விட்டார்கள். இது தான் முகாந்திரம் என்று அதே சமயத்தில் தஞ்சை மாவட்டத்தில் ராஜீவ் வருகையை அம்பலப் படுத்தி வந்த விவசாயிகள் விடுதலை முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர் கள்மீது போலீஸ் பாய்ந்தது.

விவிமு திருவையாறு ஒன்றியத் தோழர் ஜெயசீலன், திருவோண ஒன்றியத் தோழர் துரை மாணிக்கம் ஆகிய இருவர்மீதும் அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டியதாக ஒரு பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டது. 2வருடகாலம் வழக்கை நடத்தி தோழர்களைத் தண்டிக்க முயன்றது. நூற்றுக்கும் மேற்பட்ட பொய்சாட்சியங்களைப் போலீஸ் தயாரித்தது. போலீஸ் உளவுத் துறையான'கியூ' பிரிவு வழக்கை எடுத்து நடத்தியது. தமிழரசன் கோஷ்டியைச் சேர்ந்த மணிநாதன் என்ற நபர் அப்ரூவராக மாறினார்— விவிமு தோழர்கள் இருவரும் குண்டு சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த தாகப் பொய் வாக்கு மூலம் கொடுத்தார். வலிந்து வலிந்து வாதிட்ட போதும் பொய்ச் சாட்சியங்கள் வலுவின்றிச் சரிந்து நொறுங்கி விழுந்தன. தஞ்சை செஷன்ஸ் நீதிமன்றத்தில் 'குற்றம் நிரூபிக்கப்படவில்லை' என்று கூறி விவிமு தோழர்கள் இருவரும் கடந்த செப்டம்பர் 16 அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

எள்ளின் முனையளவு ஆதாரம்கூட இல்லாமல்பொய் வழக்கை நிரூபிக்க அரசு எப்படி எல்லாம் முட்டாள்தனமாகப் பேசும் என்பதற்கு இந்த வழக்கு ஓர் எடுத்துக்காட்டு; மக்கள் கை கொட்டிச் சிரிக்கும்அளவிற்குகேலிக்குரியஎல்லைக்கே போய்விட்டது.''காவேரி காய்ந்து கிடக்கும் போது கலாச்சார விழா ஒரு கேடா?'' என்று விவிமு செய்த பிரச்சாரம் ''சம்பந்தப்பட்டவர்களைக் குண்டு வைக்கின்ற அளவுக்குத் தூண்டிவிட்டது'' அரசு இப்படித்தான் வாதிட்டது.

பிரச்னைக்கு மாற்றுக் கருத்து வைத்தாலே அவர்கள் மீது பொய் வழக்கு தொடுக்கப்படுகிறது. அதாவது மாற்றுக் கருத்துக்களை யாரும் சொல்லக் கூடாது. இந்தப் பாசிச மனோபாவத்தில்தான் அரசு எந்திரம் ஊறிப் போய் இருக்கிறது.

இந்த வழக்கை எடுத்து நடத்த-ஜனநாயகவாதிகள் என்று மினுக்கிக் கொள்ளும் வழக்கறிஞர்கள் குலை நடுங்கி ஓடியபோது திரு எஸ்.என். இராமசாமி, திரு செல்வராஜ் ஆகியவழக்கறிஞர்கள் முன் வந்து வழக்கை எடுத்து நடத்தியது சிறப்பான பாராட்டுக்கு உரியதாகும்.

குடமுருட்டி வழக்கு போல ஒரு சில தீர்ப்புக்களில் குற்றமற்றவர்களுக்கு நியாயமான விடுதலை வழங்கப்படலாம். ஆனால் பல வழக்குகளில் நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஆக, வழக்கு வெற்றியா அல்லது தோல்வியா என்பதல்ல இலக்கு. நாட்டின் விடுதலையே நமது இலக்கு.



# அவதூறு தடைச்சட்ட மசோதாவுக்கு எதிராக

திருவண்ணாமலை — மங்கலம் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பில் பீரங்கித் திருடன் ராஜீவின் வாய்ப்பூட்டு சட்டமான அவதூறு தடைச்சட்ட மசோதாவை எதிர்த்து இயக்கம்எடுக்கப்பட்டது.

தோழமை அமைப்பான முற்போக்கு இளைஞர் அணியுடன் திருவண்ணாமலை நகர் முழுவதும் கையெழுத்து போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. மங்கலத்தில் அவதூறு மசோதாவுக்கு எதிராக தட்டியெழுதி வைக்கப்பட்டது.

8.9.88 அன்று வட ஆற்காடு மாவட்ட போலீஸ் சூப்பிரின்டென்டண்ட் மங்கலத்திற்கு பவனிவந்த நாளின் விடியற்காலையில் எழுதி வைத்த தட்டி காணாமல் போய் விட்டது. எஜமானனுக்கு தங்களுடைய விசுவாசத்தைக் காட்டவே உள்ளூர் போலீசு நாய்கள் தட்டியைத் தூக்கிச் சென்றிருக்கலாம் என ஊகிக்கிறோம். அதை உறுதிப்படுத்த முடியாமல் போகவே, தட்டியைத் தூக்கி சென்ற சமூக விரோதிகளுக்கு எச்சரிக்கை விடுத்து பிரச்சாரம் எடுத்தோம். ஊர் மக்கள் மத்தியில் எமது பிரச்சாரத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

'புதிய ஜனநாயகம்'
வாசகர் வட்டம்,
திருவண்ணாமலை வட்டம்.

●

● அவதூறு தடைச்சட்ட மசோதாவுக்கு எதிராக ராசிபுரம் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சாரக் குழுவின்சார்பில் பரவலாக சுவரொட்டி இயக்கம் நடத்தப்பட்டது. ''வெறி கொண்டலையும் பாசிச ராஜீவே, அவதூறு தடைச்சட்டம் போட்டுஎழுத்துரிமையையும் பேச்சுரிமையையும் பறிக்காதே!'' என்று சந்தையில் எழுதி வைத்திருந்த தட்டி பகுதி மக்களிடம் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

தகவல்:
விவிமு பிரச்சாரக்குழு
ராசிபுரம் வட்டம்.

●

● பாசிச ராஜீவ் கொண்டு வந்த 'அவதூறுத்தடை மசோதா'வுக்கு எதிராகத் தஞ்சையில் எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அக் 9 அன்று தலைமைத் தபால் நிலையத்தின் முன்பாக எழுச்சி மிக்க முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மகஇக செயலர் தோழர் மருதையன், தோழர் காளியப்பன், விவிமு தோழர் துரை மாணிக்கம் ஆகியோர் பேசினர்.

●

● சென்னை கிளையில் இக் கருப்பு மசோவுக்கு எதிராகத் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அடக்குமுறை பற்றி சிறு நாடகம்போல காட்சி விளக்க முறை நடத்தியது மக்களை ஈர்த்தது.



படிப்பகம்

www.padippakam.com

## காலரா:
# கொள்ளை நோயல்ல-அரசின் கொலைக் குற்றம்

சமீபத்தில் காலரா, வயிற்றுப் போக்கால் டில்லியில் மட்டும் இறந்தவர்கள் 600 பேர்.

குஜராத்தில் இதே போல் 600 பேர் மாண்டனர்.

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இப்படிக்கொள்ளை நோயால் செத்தவர்கள் பற்றி தினமும் பத்திரிக்கைகளில் செய்திகள்.

பிரமபுத்திராவில் வழக்கம் போல் வெள்ளப் பெருக்கால் அஸ்ஸாம் பல சிறு தீவுகளாகி விட்டது. நூற்றுக் கணக்கில் மக்கள் சாவு. பிற... பிற...

இவ்வாண்டு வட மாநிலங்கள் அனைத்திலுமே நதிகளின் வெள்ளப் பெருக்கால் மனிதர்கள், கால் நடைகள் இறப்பு. பயிர்கள், நிலங்கள் பாழ். கோடிக் கணக்கில் இழப்பு.

பூகம்பத்தால் ஏற்பட்ட கோரங்கள், இழப்புகள்.

சமீபத்திய மூன்று மாதங்களுக்குள் வந்தவைதான் இச் செய்திகள். இயற்கையின் சீற்றம், இதற்கு நாமென்ன செய்ய முடியும் என ஒதுங்கியிருக்க முடியுமா?

வளர்ச்சியடைந்த நாடுகளில் இப்படிப்பட்ட செய்திகள் விதி விலக்காகத்தான் வருகின்றன. அதிலும் ஆள் சேதம் பொருள் சேதம் மிகவும் குறைவாகத்தான் வரும். இங்கு இந்த நிலைகளுக்கு அதிகார வர்க்கமும் ஆட்சியாளர்களும்தான் காரணம்.

மக்களின் வரிப்பணத்தை கொள்ளையடித்து வெளி நாடுகளில் குவித்து வைக்கும் இந்த நாசகாரக் கும்பல்கள் மக்களின் வாழ்வைப் பற்றி கிஞ்சித்தும் அக்கறைப்படுவதில்லை.

டில்லி காலரா, வயிற்றுப் போக்கு படுகொலைகளுக்கான காரணங்களைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம்.

உயர் அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் என 3 லட்சம் பேர் 42 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வசிக்கின்றனர். இங்கு வருட பட்ஜெட்டுக்கு ஒதுக்கப்படும் பணம் 130 கோடி ரூபாய். ஒரு கோடி மக்கள் வசிக்கும் 1440 சதுரகிலோ மீட்டர் பகுதியை பராமரிக்க ஒதுக்கப்படும் பணம் ரூ 1200 கோடி. அதாவது அதிகாரிகள் வாழும் பகுதியில் சதுர கிலோ மீட்டருக்கு 3.24 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. பிற பகுதியில் சதுரகிலோ மீட்டருக்கு வெறும் 83 லட்சம்தான் செலவிடப்படுகிறது. இவ்வளவு குறைந்த பணத்தில் எப்படி மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்?

நெருக்கமாக மக்கள் வசிக்கும் காலனிகளிலும் குடியிருப்புகளிலும் நிலைமை மிக மோசம். ஆறு மீட்டர் முதல் ஒன்பதுமீட்டர் ஆழத்தில் இருக்க வேண்டிய அடி



குழாய்கள் மூன்று மீட்டர் ஆழத்தில்தான் இருக்கின்றன. அவையும் கழிப்பறைத் தொட்டி, சாக்கடை குழாய், குப்பைத் தொட்டி இவற்றின் அருகாமையிலேயே உள்ளன. தவிர மழைக்காலங்களில் சாக்கடைநீர் குடிநீர் குழாயில் ஒன்று கலந்து இந்த சாக்கடை நீரே வினியோகிக்கப் படுகிறது. மலைபோல் குவிந்து அகற்றப்படாமல் கிடக்கும் குப்பைகள் நோய்க் கிருமிகளின் உற்பத்தித் தளமாயிருக்கின்றன.

இது ஏதோ டில்லியிலிருக்கும் பிரச்சினை அல்ல, நாடுமுழுவதும் நகரங்கள் இப்படித்தானுள்ளன. இன்னும் மிக மோசமாக உள்ளன.

ஏப்ரல் மாதத்திலேயே டில்லி ஜெயப்பிரகாஷ் நாராயணன் மருந்துவமனையில் 44 பேர் காலரா, பேதி என்ச் சேர்க்கப் பட்டபோது யாரும்பிரச்சினையை பார'தூரமாக பரிசீலிக்கவில்லை. நூற்றுக் கணக்கில் சாவு ஆரம்பமானபின் கண் துடைப்புக்காக சில நடவடிக்கைகள் மேற் கொண்டனர். தடுப்பு ஊசி போடப்பட்டது. இது உடனே நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்காது. மாறாக கொதிக்க வைத்த நீரை ஆறவைத்துக் குடிப்பதுதான் காலரா, வயிற்றுப் போக்கு, மஞ்சள் காமாலை முதலியவற்றை தடுப்பதற்கான சிறந்த வழி. இந்த எளிய, பயனுள்ள வழியை விட்டு காரியம் செய்தோம் என்பதற்காக ஊசி போட்டு பம்மாத்து செய்தனர் அதிகாரிகளும் ஒட்டுப் பொறுக்கிகளும்.

குஜராத்தில் நிலைமைமிகவும் மோசம். மஞ்சள் காமாலை நோயைப் பரப்பும் கொடிய விஷக் கிருமிகள் கொடூரமான விளைவை ஏற்படுத்தியது. காலரா, வயிற்றுப் போக்கு நோயாளிகளுக்கு ஊசி வழியாக மஞ்சள் காமாலை கிருமிகள் தொற்றிக் கொண்டது. விளைவு படு பயங்கரமாயிற்று.

இந்த நிலைமைகள் ஏற்படாமலேயே தடுக்க முடியும். சுகாதாரத்தையும், சுத்தமான குடிநீரையும் மக்களுக்கு வழங்குவதன் மூலம் பிரச்சினை ஏறபடாது தடுக்கலாம். இவற்றை மீறி பிரச்சினை உருவானால் விஞ்ஞான பூர்வமான முறையில் மக்களுக்கு விசயத்தை விளக்கி தீர்க்கலாம். இங்குள்ள அரசோ எவ்விதத்திலும் மக்களுக்குப் பொறுப்பற்று தான் தோன்றித்தனமாக நடப்பது மட்டுமின்றி நோய்களை உருவாக்கும் நிலையைத்தான் ஏற்படுத்துகின்றது.

பிரச்சினை உருவான பின் நிவாரணத்திற்கு போராடுவதல்ல; மாறாக பிரச்சினை ஏற்படாமல் தடுப்பதற்கு, அதன் மூலமான பொறுப்பற்ற அரசை அடித்து நொறுக்கி மக்கள் சர்வாதிகார அரசை நிறுவுவதே தீர்வாகும். ●



படிப்பகம்

www.padippakam.com

# அனைவருக்கும் வேலையா?

# வாரிசுகளுக்கே வேலையா?

தொழிலாளிகளின் வாரிசுகளுக்கே வேலை கொடுக்கப்பட வேண்டும்—என்ற கோரிக்கையை முன் வைத்து நெய்வேலி சுரங்கத் தொழிலாளிகளும் அவர்களின் வாரிசுகளும் கடந்த மூன்று மாத காலமாகப் போராடி வருகிறார்கள்.

தொழிலாளர்களை தொழிற் சங்கவாத, பொருளாதார புதை சேற்றில் அழுத்தி வரும் தொழிற் சங்க புரோக்கர்கள் தமதுபிழைப்பு வாதத்திற்கு கிடைத்த இன்னுமொரு வாய்ப்பாக இந்த பிற்போக்கான போராட்டத்தை ஆதரித்து தலைமையும் ஏற்றனர். அதன்படி தி.மு.க தொழிலாளர் சங்கம்,பணியாளர் சங்கம், ஐ.என்.டி.யு.சி, ஜனதா, அ.தி மு க சங்கங்கள் கட்சி வேறுபாடின்றி கூட்டுக் கொள்ளைக்காக கூட்டுக் கவுன்சிலை நிறுவி, போராட்டத்தின் உச்சகட்டமாக கடந்த ஆகஸ்ட் 24 அன்று நெய்வேலியில் கடையடைப்பு போராட்டம் நடத்துவதாகவும் அறிவித்தனர்.

ஆனால் கடையடைப்பு போராட்டத்திற்கு முதல் நாளன்று அரசுத்துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகத்திற்கும் தொழிற் சங்க கூட்டுக் கவுன்சிலுக்குமிடையே திரைமறைவு பேரங்கள் நடந்தது. அதைத் தொடர்ந்து சமரச ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும், எனவேபோராட்டத்தை வாபஸ் பெறுவதாகவும் தொழிற் சங்க புரோக்கர்கள்அறிவித்தனர். இந்த ஒப்பந்தத்தம் எந்த முடிவும் இல்லாமல் வழக்கம் போலவே நிர்வாகத்தின் சூழ்ச்சியும், தொழிற் சங்க புரோக்கர்களின் துரோகமும் நிறைந்ததாக இருந்தது. இதையடுத்து போராட்டத்தை வாபஸ் பெறுவதற்கான விளக்கப்பொதுக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்தை தொழிற்சங்க புரோக்கர்கள் ஆங்கிலத்தில் படித்துக் காட்ட முற்பட்டபோது, இந்திய மக்கள் முன்னணியினர் எதிர்ப்பு தெரிவித்து தமிழில் படிக்கக் கோரினர். ஆத்திரமுற்ற தொழிற்சங்க புரோக்கர்கள் அவர்களை ஆபாசமாக திட்டியதோடு அடிக்கவும் முற்பட்டனர் இதையடுத்து கூட்டத்தினர் கூட்டுக் கவுன்சிலின் துரோகத்திற்கு எதிராக கோஷமிட்டு துரோகத்தை அம்பலப்படுத்தியதும் போலீசார் தடியடி நடத்திகூட்டத்தைக் கலைத்தனர்.

அதன் பிறகு இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஜெயக்குமார், சதீஷ் ஆகியோரை போலீசு கும்பல் கைது செய்தது. நெய்வேலி நகர எஸ்.ஐ சிற்றரசு கூட்டுக் கவுன்சிலிடமும், நிர்வாகத்திடமும் கையூட்டு பெற்றுக் கொண்டு, துரோக ஒப்பந்தத்தை எதிர்த்த இ.ம.மு.வினரைஇரண்டு நாட்கள் காவல் நிலையத்தில் வைத்து மிருகத்தனமாக தாக்கினான். எஸ்.ஐ. சிற்றரசுவை கொலை செய்ய முயற்சித்ததாகவும், பொது இடத்தில் இடையூறு செய்ததாகவும் அவர்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது. வாரிசுகளுக்கு வேலை கேட்டு துவங்கிய போராட்டம் கடைசியில்தொழிற்சங்க புரோக்கர்களின் துரோகத்திலும் போலீசின் அடக்குமுறையிலும் போய் முடிந்துள்ளது.

தொழிற்சங்கத் தரகர்களின் பிழைப்பு வாதமும், துரோகமும் போலீசின் அடக்குமுறையும் எதிர்க்கப்பட வேண்டியதுதான்! ஆனால் 'வாரிசுகளுக்கு வேலை' என்ற கோரிக்கையை நாம் ஆதரிக்க முடியுமா என்பதுதான் கேள்வி.

தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும்தான் கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் போராடுகிறார்கள். இதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் தொழிலாளிகள் தங்களது உடனடி நலனுக்காக வைக்கும் கோரிக்கைகள் அவர்களது நீண்டகால நலனுக்கு — புரட்சிக்கு — எதிராக இருக்குமேயானால் நாம் அதை ஆதரிக்க முடியாது. ஆதரிக்கவும்கூடாது. அத்தகைய கோரிக்கைகளை எதிர்த்து அம்பலப்படுத்தி தொழிலாளிகளிடையே பிரச்சாரம்செய்ய வேண்டும். இப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலைகளில், தற்காலிகமாக ஒரு பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தாலும் சரியான நிலைப்பாட்டில் ஊன்றி நிற்பதுதான் கம்யூனிஸ்டுகளின் சிறப்பு. மாறாக, எத்தனை மோசமான கோரிக்கையாக இருப்பினும்அதை ஆதரிப்பதன் மூலம் உடனடி செல்வாக்கு பெறமுடியுமென்றால்அதற்காக வால்பிடிப்பது போலி கம்யூனிஸ்டுகள் மற்றும் சந்தர்ப்பவாதிகளின் பண்பு.

தொழிலாளி வர்க்கம் தன்னை மட்டும் விடுதலை செய்து கொள்ள முயல்வதோ, முன்னேற்றிக் கொள்ள முயல்வதோ கம்யூனிச அரசியல் அல்ல; பிற ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் நலனில் தனது நலனைப் பிரதிபலிப்பது தான் கம்யூனிச அரசியல்.

பிழைப்புவாத தொழிற்சங்கங்களின் தலைமையில், இ.ம.மு வினரின் ஆதரவுடன் நடைபெறும் 'வாரிசுக்கு வேலை' போராட்டம் தொழிலாளிகளால் நடத்தப்படுகிறது என்ற ஒரேகாரணத்தினால் தொழிலாளி வர்க்கத் தன்மை கொண்டதாகிவிடாது. இது இழப்பதற்கு ஏதுமற்ற தொழிலாளரின் கோரிக்கையல்ல; மாறாக, தனது குடும்பத்தின் எதிர்காலத்துக்குமட்டும் உத்திரவாதம் தேடும் நடுத்தர வர்க்கத்தின் கோரிக்கை. வேறு வார்த்தைகளில் சொல்வதனால் அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட மேட்டுக்குடி தொழிலாளர்களின் 'தொழிலாளி வர்க்கத் தன்மையற்ற' கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை ராஜாஜியின் குலக்கல்வி முறையுடனும், இந்திராவின் பரம்பரை ஆட்சியுடனும் ஒப்பிடுவது அபத்தமானது; அதே வேளையில் இந்தக் கோரிக்கை சங்க வேறுபாடின்றி தொழிலாளிகளை ஒன்றுபடுத்தியிருப்பதை எண்ணி மகிழ்வதும் முட்டாள்தனமானது. இந்தக் கோரிக்கை நெய்வேலி சுரங்கத் தொழிலாளர்களை மட்டும் ஒரு தனிவகை இனமாக்குகிறது. "காருள்ளளவும் நீருள்ளளவும் நெய்வேலி சுரங்கம் இருக்கும்; அதில் எனது மகனுக்கும், பேரனுக்கும், கொள்ளுப் பேரனுக்கும் வேலையும் இருக்கும். ஆகவே நாடு எக்கேடு கெட்டால் எனக்கென்ன" என்ற சிந்தனையைத்தான் தொழிலாளிகளிடையே தூண்டும். இது எப்பேர்ப்பட்ட மாயை என்பதை விளக்கத் தேவையில்லை. ஆடம்பரப் பொருள் மோகம் அனைவரையும்

> 'வாரிசுக்கு வேலை' போராட்டம்தொழிலாளிகளால் நடத்தப்படுகிறது என்ற ஒரே காரணத்தினால் தொழிலாளி வர்க்கத்தன்மை கொண்டதாகிவிடாது. இது இழப்பதற்கு ஏதுமற்ற தொழிலாளரின் கோரிக்கையல்ல. தனது குடும்பத்தின் எதிர்காலத்துக்கு மட்டும் உத்திரவாதம் தேடும் நடுத்தர வர்க்கத்தின் கோரிக்கை.



படிப்பகம்

www.padippakam.com

ஆட்டிப்படைக்கும் இன்றைய நிலையில் இந்தக் கோரிக்கை தொழிலாளிகளிடம் மிச்சமிருக்கும் சமூகவுணர்வையும் தின்று ஏப்பம் விட்டு விடும். இந்தக் கோரிக்கைக்கு ஒருவேளை அரசு இணங்கக்கூடும். ஆனால் அவ்வாறு இணங்கும் அதே நேரத்தில் பிற தரப்பு மக்களையும், வேலையில்லா இளைஞர்களையும் நெய்வேலித் தொழிலாளர்களுக்கு எதிராக அது நிறுத்தும்.

அனைவருக்கும் கல்வி, வேலை, சமவேலைக்கு சம ஊதியம் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற இயலாது என்று அரசு கைவிரிப்பதில் ஆச்சரியமில்லை; தொழிலாளி வர்க்கமும் அரசின் கூற்றை மறைமுகமாக ஏற்றுக் கொண்டு, “அனைவருக்கும் கொடுக்காவிட்டால் பரவாயில்லை; எனக்கு மட்டுமாவது கொடு” என்று கேட்பதுதான் வேதனைக்குரியது.

கூலி, ஏழை, நடுத்தர விவசாயக் குடும்பங்களிலிருந்தும், உதிரிப்பாட்டாளிகள் மற்றும் பிற ஏழைக் குடும்பங்களிலிருந்தும் படித்துவிட்டு வேலை தேடும் இளைஞர்கள் ‘வாரிசுக்கு வேலை’ என்று எதைக் கேட்பார்கள்? யாரிடம் போய்க் கேட்பார்கள்? நெய்வேலித் தொழிலாளர்களின் கோரிக்கையைப் பற்றி அவர்கள் என்ன கருதுவார்கள்? இதுதான் உரைகல். வேலையில் இருக்கும் தொழிலாளர்கள் வேலையில்லாதோரின் பிரச்சினையை அக்கறையுடன் பரிசீலிக்கவில்லையானால் அவர்கள் தங்கள் தலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக் கொள்கிறார்கள் என்றுதான் பொருள்.

ஒரே நிறுவனத்தில் தொடர்ச்சியாகவும், எந்தப் பிரச்சினையுமின்றியும் நீண்டகாலம் வேலை செய்தவரின் வாரிசுகளுக்குமட்டுந்தான் இச்சலுகை கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே தொழிலாளி, தனக்குப் பிறகு தனது வாரிசுக்கும் வேலை கிடைக்கவேண்டும் என்ற நப்பாசை காரணமாக, வர்க்க உணர்வோடு போராட முன் வரமாட்டார். போராட்டத்தால் ஏற்படும் இழப்புகளோடு தனது வாரிசுக்கும் வேலை கிடைக்காமல் போய் விடும்; தன்னைப்போலவே தனது மகனும் எதிர் காலத்தில் வேலையின்றி தவிக்க நேரிடும் என்ற கருத்து அவரை எப்போதும் அச்சுறுத்திக் கொண்டேயிருக்கும். எனவே தொழிலாளி குறிப்பிட்ட வரம்புக்குமேல் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லவே தயங்குவார். நமக்கேன் வம்பு என்று நிர்வாகத்துக்கு விசுவாசமானவராக மாறிப் போவார்.

போலீசு அதிகாரியைத் தாக்கி கொலை செய்ய முயன்றதாக பொய்வழக்கு சோடிக்கப்பட்டு, போலீசாரால் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்ட இந்திய மக்கள் முன்னணியின்

ஜெயக்குமார்



சதீஷ்



தொழிற்சங்க புரோக்கர்களும் வாரிசுகளுக்கு வேலை கோரும் தரகு வேலையில் முன்னணியில் நிற்கின்றனர். தொழிற்சங்க தரகு வேலையோடு தமது பிழைப்புக்கான இன்னொரு தொழிலாக இதை முனைப்போடு செய்து வருகின்றனர். உண்மையில் இக்கோரிக்கையை விரிவுபடுத்தி ஆழப்படுத்தியதே தொழிற்சங்க புரோக்கர்கள்தான். போராடிப் பெறுவதை வாதாடிப்பெறுவோம், போராடினால் வேலை போய் விடும்; அல்லது முதலாளி கதவடைப்பு செய்து விடுவான். அப்புறம் உனக்கும் உன் வாரிசுகளுக்கும் எதிர்காலமே இல்லை என்று பீதியூட்டிதொழிலாளிகளைமுதலாளிகளுக்கு அடிமைப்படுத்தவும், தமதுதொழிற்சங்கதரகு வேலைக்கும் கிடைத்த அரிய வாய்ப்பாக இக்கோரிக்கையை அவர்கள்பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தொழிற்சங்க புரோக்கர்களை தொழிலாளிகளிடமும் அவர்களின் வாரிசுகளிடமும் தோலுரித்துக் காட்டவேண்டும். இதைச் சாதிக்க வேண்டுமானால் நாமும் வாரிசுகளின் போராட்டத்தில் பங்கேற்று முன்னணிப் பாத்திர மாற்றுவதன் மூலமே துரோக தொழிற்சங்கங்களை அம்பலப்படுத்த முடியும் என்று வாதங்களை முன்வைத்துக் கொண்டு இந்திய மக்கள் முன்னணியினரும் இப்பிற்போக்கான போராட்டத்தில் “முற்போக்கு” பாத்திரமாற்ற குதித்துள்ளனர்.

இதன் மூலம் தொழிற்சங்க பிழைப்புவாதிகளை குறிப்பிட்ட இப்பிரச்சினையில் வேண்டுமானால் அம்பலப்படுத்திக் காட்ட முடியுமே தவிர, நிர்வாகமும் தொழிற்சங்கமும் தொழிலாளிகளை சுயநலவாதிகளாகச் சீரழித்து, மேலும் மேலும் முதலாளித்துவ சிந்தனைக்கு அடிமையாக்கி வருவதை அம்பலப் படுத்திக் காட்ட முடியாது. இட ஒதுக்கீட்டுக்காகப் போராடும் வன்னியர்களோடு சேர்ந்துகொண்டு முற்போக்காகப் போராடி அவர்களது பிற்போக்கான கோரிக்கையை முறியடித்து புரட்சிப் பாதைக்குத் திருப்பி விடமுடியாது. நாடாளுமன்றத்தில் பங்கேற்று ஆளும் வர்க்ககட்சிகளையும், கேடுகெட்ட ஆட்சிமுறையையும் அம்பலப் படுத்துகிறேன் என்று சூளுரைத்துப் புறப்பட்ட போலிக் கம்யூனிஸ்டுகள் கடைசியில் ஓட்டுப் பொறுக்கிகளாக சீரழிந்து போனதைப் போலத்தான் இதுவும் அமையும். இதுபோன்ற பிரச்சினைகள் அனைத்திலும் இ.ம மு. தலைமை உணர்வுபூர்வமாகவே சந்தர்ப்பவாத அணுகுமுறையை கடைபிடிக்கிறது. இது புரட்சிக்கு எதிரானதென்பதை உணர்ந்து நேர்மையான அணிகள் அதிலிருந்து வெளியேற வேண்டும்!

எனவே வாரிசுகளோடு சேர்ந்து கொண்டு போராடுவதல்ல. மாறாக, அதற்கு வெளியே நின்று இத்தவறான பிற்போக்கான கோரிக்கையை அவர்களுக்குப் புரிய வைத்து உணர்த்துவதும், தொழிற்சங்க புரோக்கர்களை அம்பலப்படுத்துவதுமாக நமது போராட்டம் இருக்க வேண்டும்.

(நெய்வேலியில் நடைபெற்ற வாரிசுகளின் போராட்டம் பற்றிய செய்திகளைத் திரட்டித் தந்த இ.ம.முவைச் சேர்ந்த ஜெயக்குமார் மற்றும் நெய்வேலி—வடலூர் புதிய ஜனநாயக வாசகர் வட்டத் தோழர்களுக்கு எமது நன்றி.)



படிப்பகம்

www.padippakam.com

# திக்கெட்டும் ராணுவ சர்வாதிகாரம் தீர்வாகாது நாடாளுமன்ற ஜனநாயகம்

சியோல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பல விளையாட்டு வீரர்கள் புதிய உலக சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, இது என்ன சாதனை? இதைவிட பெரிய சாதனைகளை நாங்கள் நிகழ்த்தியுள்ளோம் என்று மார்தட்டுகிறார்கள் உலகெங்குமுள்ள ராணுவ சர்வாதிகாரிகள்.

தென் மேற்கு கோடியில் சிலி என்னும் தென்னமெரிக்க நாட்டின் கொடிய சர்வாதிகாரி பினோசெட் தனது ஆட்சியை இன்னும் எட்டாண்டுகளுக்கு நீட்டித்துக் கொண்டு கொட்டமடிக்கிறார். அதே போல தென் கிழக்குக் கோடியில் இந்தோனேசியாவில் கிழட்டு ராணுவ சர்வாதிகாரிசுகார்டோவும் தனது கொடுங்கோலாட்சியை நீட்டித்துக் கொண்டு உலகிலேயே நீண்டகாலம் ஆளும் சர்வாதிகாரியாக 'சாதனை' படைத்துள்ளார்.

இந்த அதிசயங்களைப் பார்த்த பர்மீய ராணுவ கும்பலுக்கும் நாக்கில் எச்சில் ஊற ஆரம்பித்தது. ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிரான பர்மீய மக்களின் தொடர்ச்சியான விடாப்பிடியான போராட்டத்தையடுத்து, ஆளும் மாங் மாங் கும்பல் தேர்தல் நடத்த ஒப்புக் கொண்ட நேரத்தில், பர்மாவில் ஜனநாயகத்தை நோக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக உலகமே வியந்து கொண்டிருந்த நேரத்தில், மீண்டும் வேறொரு ராணுவ கும்பல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு கொக்கரிக்கிறது.

கடந்த இரு மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்துவரும் பர்மீய மக்களின் சர்வாதிகார எதிர்ப்புப் போரை எதிர் கொள்ள முடியாமல் அடுத்தடுத்து ராணுவ சர்வாதிகாரிகள் அஞ்சி நடுங்கி அயல் நாட்டுக்குத் தப்பியோடினர். 26 ஆண்டுகாலம் ஒரு கட்சி ராணுவ சர்வாதிகார ஆட்சி நடத்திய பர்மீய கிழட்டு சர்வாதிகாரி நீவின் பதவியைத் துறந்து ஓடினார். அதன் பிறகு ஆட்சிக்கு வந்த ராணுவ சர்வாதிகாரி செயின் லெவின் பதவியேற்ற 17 நாட்களிலேயே மக்கள் போராட்டத்தை எதிர் கொள்ள முடியாமல் ராஜினாமா செய்து விட்டு அயல் நாட்டுக்குத் தப்பியோடினார். அடுத்து அதிபராக வந்த மாங் மாங், இன்னும் 3 மாதத்தில் தேர்தல் நடத்துவதாகப் பசப்பினார். ஆனால் பர்மீய மக்களோ உடனடியாக இடைக்கால அரசை அமைத்து, அதன் பொறுப்பில் பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கான தேர்தலை நடத்தாத வரை எங்கள் போராட்டம் ஓயாது என்று தொடர்ந்து விடாப்பிடியாக வீதிகளில் வீரப்போர் புரிந்தனர்.

இத்தனை நாளும் பெயரளவுக்கு பர்மீய சோசலிசக்கட்சியை முன்னிறுத்தி அதிகாரத்தைச் சுவைத்துக் கொழுத்து வந்த ராணுவ கும்பல், பொங்கியெழும் மக்கள் புரட்சியைக் கண்டு அஞ்சி நடுங்கியது. பர்மீய மக்களின் விரஞ்செறிந்த சர்வாதிகார எதிர்ப்புப் போர் வெற்றி பெற்றால், தங்கள் அதிகாரத்துக்கும் கொள்ளைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றஞ்சி, இறந்து கொண்டிருக்கும் ராணுவ சர்வாதிகார மிருகம் தனது இறுதித் தாக்குதலை இப்போது தொடுத்துள்ளது.

பர்மீய சோசலிசக் கட்சியின் பின்னிருந்து கொண்டு அதிகாரத்தைச் சுவைத்து வந்த ராணுவ கும்பல், இப்போது கையாலாகாத மாங் மாங் ஆட்சியைத் தூக்கியெறிந்து விட்டு தானே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. ராணுவந் தளபதியும் ராணுவ அமைச்சருமான சாமாங் என்பவர் இந்த ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்றி தனக்குத் தானே அதிபராக மகுடம் சூட்டிக் கொண்டுள்ளார். மாங் மாங் ஆட்சியில் ஓரளவுக்குத் தளர்த்தப்பட்ட ராணுவச் சட்டத்தை சாமாங் கும்பல் இப்போது மேலும் இறுக்கியுள்ளது.

ஆட்சிக்கு வந்த புதிய ராணுவ கும்பல் தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள கொடிய காட்டுமிராண்டித்தனமாக அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. "வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்திய நிராயுதபாணியான மக்கள் மீதும், பள்ளிச் சிறுவர்கள் மீது கண்மூடித் தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியது. மாண்டு போனவர்களின் சடலங்களைக்கூட எடுக்க முடியாதபடி ராணுவம்வெறித்தனமாக சுட்டது; வீதியெங்கும் பிணங்களும் ரத்த ஆறுமாக காட்சியளித்தது. இது வரை ஈராயிரத்துக்கும் மேலான மக்கள் கொடூரமாக கட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்" என்று வெளிநாட்டுப் பத்திரிக்கைகள் ராணுவ கும்பலின் கோர முகத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராடும் பர்மீயமக்கள். விழலுக்கு இறைத்த நீராகிவிடுமோ இப்போராட்டம்?






படிப்பகம்

www.padippakam.com



சிலி நாட்டின் நீண்டகால ராணுவ சர்வாதிகாரி பினோசெட்



அமெரிக்க அடிவருடி திருமதி அகினோ

பர்மாவைப் போல பெருமளவு மக்கள் பங்கேற்புடன் சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டம் நடைபெறவில்லையென்றாலும், சிலி நாட்டின் 15 ஆண்டுகால ராணுவ சர்வாதிகாரி பினோசெட் தனது ஆட்சியை இன்னும் எட்டாண்டுகளுக்கு நீட்டித்துக் கொண்டுள்ளார். வேறு வேட்பாளர் யாரையும் அனுமதிக்காமல், பினோட்செட் ஆட்சியில் நீடிக்கலாமா கூடாதா என்பதற்கான கருத்தறியும் மோசடித் தேர்தல் நடத்தி மகுடம் சூட்டிக் கொள்ள அலைகிறது பினோ செட் கும்பல்.

இதற்கெதிராக தலைநகர் சாண்டியாகோவில் அணிதிரண்டு போராடிய மாணவர்கள் மீது ராணுவம் கண்மூடித்தனமாக சுட்டது. ஏராளமான மாணவர்களைக் கைது செய்து சித்திரவதை செய்தது என்பதை சர்வதேச மனித உரிமைக் கவுன்சிலின் அறிக்கை அறைந்து கூறுகிறது.

பர்மாவிலும் சிலி நாட்டிலும் இன்னும் பாகிஸ்தானிலும், பங்களாதேசிலும் ராணுவ சர்வாதிகாரத்துக்கு மாற்றுத் தீர்வாக பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையை முன் வைத்தே எதிர்க் கட்சிகள் போராடுகின்றன. முதலாளித்துவ அறிஞர்கள் அதையே தீர்வாகக் கூறுகின்றனர். ஆனால் ராணுவ சர்வாதிகார ஆட்சி முறைக்கு நாடாளுமன்ற ஜனநாயகம் ஒருக்காலும் தீர்வாகி விடாது. ஏனெனில் இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்திலிருந்து உருவானதுதான் ராணுவ சர்வாதிகாரம். எங்கெல்லாம் நாடாளுமன்ற ஜனநாயகம் நெருக்கடிக்குள்ளாகிறதோ அங்கெல்லாம் ராணுவமே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதென்பது உலக நியதியாகிவிட்டது. இந்நிலையில் ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் பொங்கியெழும்போது, மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கோருவதென்பது, வெள்ளத்திற்கு வடிகால் வெட்டி திசை திருப்பும் முயற்சியேயாகும்.

அதே சமயம் ராணுவ சர்வாதிகாரத்துக்கு தீர்வாக முதலாளித்துவ மூதறிஞர்கள் முன் வைக்கும் நாடாளுமன்ற ஜனநாயகம் எங்கேயும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை.

ஏன் இல்லை என்று கேட்டு, தென்கிழக்கே பிலிப்பைன்ஸ் நாட்டில் மார்க்கோசின் ராணுவ சர்வாதிகார ஆட்சி வீழ்ந்து திருமதி அகினோவின் ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ளதாக பரிகசிக்கத்தக்க ஒரு உதாரணத்தை அவர்கள் காட்டுகிறார்கள். ஆனால் அதிகாரச் சுவை கண்ட ராணுவ கும்பல் அகினோவின் ஆட்சியைக் கவிழ்க்க பலமுறை முயன்றது. இன்னமும் அந்த அபாயம் தொடரவே செய்கிறது. அச்சுறுத்தும் ராணுவ கும்பலுக்கு ஏராளமான சலுகைகள் கொடுத்தும், அதிகாரத்தில் கூடுதல் பங்களித்துக் கொண்டும்தான் இன்று அகினோ அம்மையார் ஆட்சியைத் தொடர முடிகிறது. அதே சமயம் மார்க்கோசின் ராணுவ ஆட்சிக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் எதிராகப் பெருகிய மக்கள் போராட்டத் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டு ஆட்சிக்கு வந்த அகினோ அம்மையார், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. மாறாக போராடும் மக்களை மிருகத்தனமாக ஒடுக்கும் சர்வாதிகாரியாக பரிணமித்துள்ளார். இதுதான் பீற்றிக் கொள்ளப்பட்ட அகினோ அம்மையாரின் ஜனநாயக ஆட்சியின் லட்சணம்!

அதே போல மேற்கு கோடியிலுள்ள சின்னஞ்சிறு நாடான ஹெய்தியிலே 28 ஆண்டுகால டுவாலியர் குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சி, பொங்கியெழுந்த மக்கள் போராட்டத்தையடுத்து வீழ்ந்தது. போராட்டத்தின் தலைமையை ராணுவ அதிகாரி ஹென்றி நெம்ப்பியும் அவரது கூட்டாளிகளும் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தனர். சர்வாதிகார ஆட்சியை ஒழித்து ஜனநாயகத்தை அவர்கள் மலர்விப்பாளர்கள் என்று முதலாளித்துவ மூதறிஞர்கள் நம்பினர். ஆனால் அதிகாரத்துக்கு வந்த ஹென்றிநெம்பி கும்பலே சர்வாதிகாரிகளாக மாறி மக்களை அடக்கினர். இப்போது இந்த கும்பலையும் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் தூக்கியெறிந்துவிட்டு, ஜெனரல் ப்ராஸ்பர் அவ்ரில் தலைமையிலான ராணுவ கும்பல் சமீபத்தில் ஆட்சியைப் பிடித்துள்ளது.

உலகெங்கும் நடந்தேறிவரும் நிகழ்ச்சிப் போக்குகள் அனைத்தும், ராணுவ சர்வாதிகார ஆட்சிகள் ஒரு போதும் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பாது என்பதையே மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன. ராணுவ அல்லது பாசிச சர்வாதிகாரத்தை பாட்டாளி வர்க்கத் தலைமையில் அனைத்து மக்களும் அணிதிரண்டு ஆயுதமேந்திப் போராடுவதன் மூலமே முறியடிக்கமுடியும். ஆட்சி முறையில் மாற்றம் மட்டுமல்ல, சமுதாய மாற்றத்துக்கான மக்கள் புரட்சியே சர்வாதிகார ஆட்சிக்கு நிரந்தரமாக சாவு மணி அடிக்கும். தோழர் லெனின் உருவாக்கிய சோவியத் வடிவிலான—புரட்சிகர மக்கள் கமிட்டி எனும் அரசு வடிவமே சர்வாதிகாரத்துக்கான அடிப்படைகளையே தகர்த்தெறியும்.

இதையே இட்லர்—முசோலினியின் பாசிச சர்வாதிகாரத்தை வீழ்த்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீரவரலாறு நிரூபித்துக் காட்டுகிறது. உலகெங்கும் சர்வாதிகார நுகத்தடியின்கீழ் அடிமைப்பட்டுள்ள மக்கள் விரைவில் இச்சரியான பாதையை நோக்கித் திருப்புவார்கள். அதுவரை தன்னெழுச்சியாகவும், பாட்டாளி வர்க்கத் தலைமையின்றியும், நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கோரியும் இம் மக்கள் தொடுக்கும் சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களை நாம் ஆதரிக்க முடியுமே தவிர, அவர்களது மாற்றுத் தீர்வை ஆதரிக்க முடியாது.

● குமார்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

வறுமையின் துயரம் தனது சுவடுகளைப் பதித்துள்ள இந்தச் சிறுமியின் படம் பெரும்பாலான இந்தியப் பத்திரிக்கைகளிலே வருகிறது. ஒரு தொண்டு நிறுவனத்தின் விளம்பரம். இவளைப் போன்ற ஏழைச் சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் நோய்த் தடுப்பு, சத்துணவு, சுற்றுச் சூழல், மருத்துவம், கல்வி, கைத்தொழில் ஆகிய சேவைகள் செய்து வருகிறது அந்நிறுவனம். அதற்காக நிதி கோரித் தரப்படும் விளம்பரம் அது.

குழந்தைகளின் தேவைகள் மிகச் சிறியவை. நீங்கள் அதில் பங்கு கொள்ளுங்கள் என்று அழைக்கிறது. 30 ரூபாயில் ஒரு குழந்தைக்கு ஓராண்டுக்குத் தேவையான நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்க முடியும். 40 ரூபாயில் ஒரு மாதத்துக்குத் தேவையான பராமரிப்பு, அல்லது மருத்துவம் அல்லது சத்துணவு அளிக்க முடியும். 50 ரூபாயில் ஒரு மாதக் கல்வியளிக்க முடியும் 100 ரூபாயில் ஒரு மாதத் தொழில் பயிற்சி அளிக்க முடியும். 200 ரூபாயில் ஒரு மாதத்துக்குத் தேவையான உணவு முதலிய சகல தேவைகளையும் அளிக்க முடியும். என்று அந்த விளம்பரத்தில் கூறுகிறது.

இப்படிப் பல தொண்டு நிறுவனங்கள், ஜக்கிய நாடுகள் சபையின் சமூக சேவைக்கான நிறுவனங்களின் இந்தியக் கிளைகள் தமது பணிகளைத் தொடங்கவும்—தொடரவும் பொது மக்களிடம் நிதி கோருகின்றன. இந்தச் சிறுமியின் துயரத்தைத் துடைக்க எவ்வளவு சிறிய தொகையானாலும் பயன்படும்.

இதோ இங்கே உள்ள இரு





படங்களில் உள்ளவர் ஆங்கிலேய நாட்டு நடிகர்—இயக்குனர் கென்னைத் கிரிஃபித். பாசிச ராஜீவின் தாத்தா நேருவின் வாழ்க்கை வரலாறை 2 மணி நேரம் ஓடும் வானொளி சினிமா எடுக்க வந்தவர். இங்கே அந்த சினிமாவில் வரும் ''செட்டில்'' காட்சியளிக்கிறார். இந்த சினிமாவுக்கு இந்திய அரசு கொடுத்த தொகை ஒன்றரைக் கோடி ரூபாய் கிரிஃபித்துக்கு ஒரு நாள் செலவு 9000 ரூபாய். இந்தியாவில் அவர் தங்கியிருந்த செலவு மட்டும் 9 லட்சம் ரூபாய். உண்மையில் இவன் ஒரு வெள்ள இன—நிற வெறியன். இந்தியர்கள் பன்றிகள், நாய்கள், வெறுக்கத்தக்க கயவ கள், இழிபிறவிகள் என்று பகிரங்கமாகவே ஏசுபவன் ஜாலியன் வாலாபாக் படுகொலையைச் செய்த தளபதி டயர் பாராட்டுக்குரிய ஒரு திறமையான வீரன் என்று பகிரங்கமாகவே புகழ்பவன். ''இப்படிப்பட்ட இன—நிற வெறியினைத் தேடிப்பிடித்து, இவர் தான் தனது தந்தையின் வ லாற்றை சினிமா எடுக்க வேண்டும்'' என்று ஆசையோடு சிபாரிசு செய்தவர் இந்திரா காந்தி.



ஏழைச் சிறுவர்—சிறுமிகளின் நோய்த் தடுப்பு, சத்துணவு கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளுக்கே பொதுமக்களிடம் நிதிகோரும் அதே சமயம் இன—நிற வெறியனுக்கு லட்ச லட்சமாகக் கொடுத்து நேரு பரம்பரை தனது வரலாறை சினிமாவாக்கு கிறது. பலகோடி செலவில் ருஷ்ய அரசோடுசேர்ந்து நேரு, இந்திரா வாழ்க்கை வரலாறை சினிமா எடுக்க இருக்கிறது அரசு. ஏழைகள் வறுமையில் துடிக்கும்போது ஆடம்பர வாழ்வுக்கும், பரம்பரை புகழ் பாடவும் பணத்தை வா இறைக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். அதன் அக்கிரம, வக்கிர ஆட்சி இன்னும்நீடிக்கலாமா?

படிப்பகம்